www.penakural.com

மலர்: 02 இதழ்: 01 நவம்பர் 2023 விலை: ₹ 20/-

RNI No.: TNTAM/2022/85375

# பேனா குரல்

PENA KURAL

தமிழ் மாத இதழ்



டிஎன்பிஎஸ்சி தேர்வு முடிவுகள்:

**52 ஆயிரம் விடைத்தாள்களை திருத்த 9 மாதங்களா?**

அன்புமணி ராமதாஸ்!



## “ஒவ்வொரு வீட்டிலிருந்தும் முற்றங்களிலிருந்தும் இங்கு வந்துள்ள மண் நமது கடமையை நமக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்கும்”

– பிரதமர் நரேந்திர மோடி

அனைவருக்கும்
பேனா குரல்
மாத இதழ் சார்பாக
இனிய தீபாவளி
நல்வாழ்த்துகள்!


Subzero Cool Tech
AC REPAIR
SERVICE
&
RENT
AT YOUR DOOR STEP
AC REPAIR
INSTALLATION
MAINTENANCE
AMC SERVICE
We Repair all Brands
Uninstallation
Gas Filling
Air Duct Cleaning
HIGH QUALITY
PREMIUM
SERVICE
CONTACT US
Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil, Mettukuppam,
Chennai - 600097.
SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

பேனா குரல்
PENA KURAL
RNI No.: TNTAM/2022/85375
தமிழ் மாத இதழ்
மலர்: 02 இதழ்: 01 நவம்பர் 2023 விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

## தலையங்கம்

### ஆசிரியர் குரல்

# தீர்வுதான் என்ன?

வாழ்வாதாரமாகக் கால்நடை வளர்ப்பு இருப்பது என்பது கிராமப் பகுதிகளில் அத்தியாவசியமானது. ஆனால், நகரங்களில் முக்கியமான புறம்போக்கு இடங்களையும், சொந்த இடங்களையும் கால்நடை வளர்ப்பிற்காகச் சிலர் வைத்துக் கொண்டிருப்பதிலும்கூட தவறில்லை. அவர்கள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளைத் தெருக்களில் நடமாடவிட்டு மற்றவர்களுக்குத் தொந்தரவு ஏற்படுத்துகிறார்கள் எனும்போது, அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தெருக்களில் அவிழ்த்து விடப்படும் பசு மாடுகளும், எருமை மாடுகளும் சுவரொட்டிகளைக்கூட விட்டு வைக்காமல் சுவைத்துச் சாப்பிடுவதைப் பார்க்கும்போது, பால் கறந்து வியாபாரம் செய்பவர்கள் எந்த அளவுக்குத் தீனி போடுகிறார்கள் என்பதை உணர முடிகிறது. தெருவோரக் கடைகளில் இருந்து போடப்படும் உணவைக்கூட அவை சாப்பிடத் தயங்குவதில்லை. மாமிச உணவும் உட்கொள்கின்றனவா என்பது தெரியவில்லை.

முறையாகத் தீனி போடாமல், தெருவில் அலைவிடுவதும், கால்நடைகள் கட்டப்படும் பகுதிகளில் சாணமும், கோ மூத்திரமும் தேங்கி சுற்றுச்சூழலை பாதிப்பதும் எந்த வகையில் நியாயம் என்று கேள்வி கேட்கக்கூட யாரும் தயாராக இல்லை. மாநகராட்சியின் சுகாதாரத் துறையும், காவல்துறையினரும் இது குறித்துக் கண்மூடி இருப்பதன் மர்மம் என்ன என்பதும் தெரியவில்லை.

அண்மையில் சென்னை திருவல்லிக்கேணியில் முதியவர் ஒருவர் தெருவில் திரிந்த பசுமாட்டால் தாக்கப்பட்டு, தூக்கி எறியப்பட்டிருக்கிறார்; தாம்பரத்தில் மாடு மீது மோதி இருசக்கர வாகனத்தில் சென்ற குடும்பத்தினர் படுகாயம் அடைந்தனர் என்பது மட்டுமல்ல, மூன்று வயது குழந்தை இறந்திருக்கிறது; அரும்பாக்கத்தில் பள்ளிக்குச் சென்ற சிறுவன் மாடு முட்டியதால் படுகாயம் அடைந்திருக்கிறான் - இப்படி நாளும் பொழுதும் ஏதாவது ஒரு பகுதியில் ஏதாவது ஒரு சம்பவம் நடந்து கொண்டிருக்கிறது.

சென்னை மாநகரப் பகுதிகளைவிட, புறநகர்ப் பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மிக அதிகம். மாலை வேளைகளில் கிழக்கு கடற்கரை சாலை, பழைய மாமல்லபுரம் சாலையில் பயணித்தால், சாலைகளில் ஆங்காங்கே படுத்துக் கொண்டிருக்கும் கால்நடைகளின் எண்ணிக்கை நம்மை மிரள வைக்கும். திருவல்லிக்கேணி, பழைய மாம்பலம், வடபழனி பகுதிகளும், திருவான்மியூர், நீலாங்கரை, பெருங்குடி, துரைப்பாக்கம், நாவலூர், கேளம்பாக்கம் பகுதிகளும் சாலைகளில் திரியும் மாடுகளால் நிறைந்து காணப்படுகின்றன.

இதுவரை சென்னை மாநகராட்சி தெருவில் திரியும் சுமார் 4,000 மாடுகளைப் பிடித்திருக்கிறது. அபராதம் வசூலித்து அவற்றை விடுவித்து விடுகிறது. ஏறத்தாழ 3,000 பேர் கால்நடையைத் தெருவில் அவிழ்த்து விட்டதாகப் பிடிக்கப்பட்டனர். ஆனால், ஒருவர் மீதுகூட காவல்துறை வழக்குப் பதிவு செய்ததாகத் தெரியவில்லை.

சென்னையில் சாலையில் திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில், கோயம்பேட்டிலும், கொடுங்கையூரிலும் தற்காலிகமாக மாட்டுத் தொழுவங்கள் அமைக்கப்படும் என மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்திருக்கிறார். சாலைகளில் மாடுகளைப் பிடிக்க மண்டலத்துக்கு ஒரு மாடு பிடிக்கும் வாகனம், பணியாளர்கள், கால்நடை மருத்துவர்கள், சுகாதார ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். கால்நடைகள் தெருவில் திரிந்தால் அவற்றைப் பிடித்து, அரசு கால்நடைப் பண்ணைகளுக்கு அனுப்பினால் மட்டும்தான் இந்த பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்!

— **ராதிகா சிவசங்கர்**, ஆசிரியர்

# மணல் கொள்ளையர்களை அடக்குங்கள்!

# மருத்துவர் ராமதாஸ் கோரிக்கை!

மணல் கொள்ளையை தடுத்த காவல் அதிகாரி மீது தாக்குதல் நடத்தி முன்னாள் இராணுவ வீரருக்கு அரிவாள் வெட்டு சம்பவத்திற்கு காரணமாக மாறிய மணல் கொள்ளையை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும் என பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது: வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகில் சின்ன தோட்டாளம் என்ற இடத்தில் மணல் கடத்தலை தடுக்க முயன்ற காவல்துறை சிறப்பு சார் ஆய்வாளர் மணவாளன் என்பவரை மணல் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள் கடுமையாக தாக்கி, கொலை செய்ய முயன்றுள்ளனர்.

வேலூர் மாவட்டத்தின் அணைக்கட்டு பகுதியில் பொன்னையாற்றிலிருந்து மணல் கொள்ளையடிக்கப் படுவதை படம் பிடித்த ஓய்வு பெற்ற இராணுவ வீரரும், சமூக ஆர்வலருமான உமாபதி என்பவரை மணல் கடத்தல் கும்பல் அரிவாளால் வெட்டி காயப்படுத்தியுள்ளது. ஒரே மாவட்டத்தில், ஒரே இரவில் நிகழ்ந்துள்ள இரு தாக்குதல்களும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. இயற்கை வளங்களை பாதுகாக்க முயலும் அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் அதிகரித்திருப்பது கண்டிக்கத்தக்கது.

சிவகங்கை மாவட்டம் காளையார்கோயில் பகுதியில் மணல் கடத்தலை தடுக்க முயன்ற கிராம நிர்வாக அலுவலர் சேகர் என்பவர் இரு நாட்களுக்கு முன் தாக்கப்பட்டார்.திண்டுக்கல் மாவட்டம் ஆயக்குடி பகுதியில் கடந்த இரு வாரங்களுக்கு மணல் கொள்ளையை தடுத்த ஆயக்குடி கிராம நிர்வாக அலுவலர் கருப்பசாமி உள்ளிட்ட நான்கு அதிகாரிகளை ஊர்திகளை ஏற்றி கொலை செய்ய முயற்சி நடந்தது. இந்த இரு நிகழ்வுகளால் ஏற்பட்ட பதற்றம் விலகும் முன்பே மணல் கொள்ளையை தடுக்க முயன்றவர்கள் மீது அடுத்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதிலிருந்தே தமிழ்நாட்டில் மணல் கொள்ளை எந்த அளவுக்கு தலைவிரித்தாடுகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

தூத்துக்குடி மாவட்டம் முறப்பநாடு பகுதியில் மணல் கொள்ளைக்கு எதிராக செயல்பட்ட கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் அவரது



அலுவலகத்தில் சில மாதங்களுக்கு முன் வெட்டிக் கொல்லப்பட்டது, சேலம் மாவட்டம் மானாத்தாள் பகுதியில் மணல் கடத்தலில் ஈடுபட்டவர்களை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்த கிராம நிர்வாக அலுவலரை வெட்ட அரிவாளுடன் துரத்தியது என மணல் கொள்ளையர்களின் அட்டகாசங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது ஆரோக்கியமானதாக தெரியவில்லை.

தடி எடுத்தவர்கள் எல்லாம் தண்டல் காரர்கள் என்பார்கள். ஆனால், இப்போது தண்டல்காரர்கள் எல்லாம் தடி எடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். உடனடியாக இது கட்டுப்படுத்தப்படாவிட்டால் தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கை காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டு விடும்.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆற்று மணல், சவுடு மண் என அனைத்து வகையான இயற்கை வளங்களும் கட்டுப்பாடின்றி கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றை தடுக்க வேண்டியது அரசின் கடமை. அதை உணர்ந்து தமிழகத்திற்கு மாபெரும் கேடாக மாறி வரும் மணல் கொள்ளையை இரும்புக்கரம் கொண்டு அடக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

**- துரை. சந்துரு**

# இந்தியா- வங்கதேசம் இடையேயான ரயில் சேவை

## பிரதமர் மோடி, வங்கதேச பிரதமர் ஹசீனா தொடங்கி வைத்தனர்!




இந்தியா- வங்கதேசம் இடையேயான புதிய ரயில் சேவையை பிரதமர் மோடி மற்றும் வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

பிரதமர் நரேந்திர மோடியும் வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனாவும் இணைந்து இன்று காலை 11 மணியளவில் காணொளிக் காட்சி மூலம் மூன்று இந்தியாவின் உதவியுடனான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்தனர்.

அகௌரா - அகர்தலா எல்லை தாண்டிய ரயில் இணைப்பு; குல்னா - மோங்லா துறைமுக ரயில் பாதை; மற்றும் மைத்ரீ சூப்பர் அனல்மின் நிலையத்தின் அலகு - மிமி ஆகிய மூன்று திட்டங்களை இருவரும் தொடங்கி வைத்தனர்.

திரிபுரா-வங்கதேசம் ரயில் சேவை: வங்கதேசத்துக்கு வழங்கப்பட்ட ரூ.392.52 கோடி இந்திய அரசின் மானிய நிதியுதவியின் கீழ் அகௌரா-அகர்தலா எல்லை தாண்டிய ரயில் இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வங்கதேசத்தில் 6.78 கி.மீ இரட்டை ரயில் பாதை மற்றும் திரிபுராவில் 5.46 கி.மீ இரட்டை ரயில் பாதையுடன் ரயில் இணைப்பின் நீளம் 12.24 கி.மீ ஆகும்.

**துறைமுக ரயில் பாதை:** குல்னா-மோங்லா துறைமுக இரயில் பாதைத் திட்டம் இந்திய அரசின் சலுகைக் கடன் திட்டத்தின் கீழ் 388.92 மில்லியன் அமெரிக்க டாலர் மொத்த திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் மோங்லா துறைமுகத்திற்கும் குல்னாவில் தற்போதுள்ள ரயில் வலையமைப்பிற்கும் இடையில் சுமார் 65 கி.மீ அகல ரயில் பாதை அமைக்கப்படுகிறது. இதன் மூலம், வங்கதேசத்தின் இரண்டாவது பெரிய துறைமுகமான மோங்லா அகல ரயில் பாதையுடன் இணைக்கப்படுகிறது.

**அனல்மின் திட்டம்:** 1.6 பில்லியன் அமெரிக்க டாலர் இந்திய சலுகை நிதி திட்டத்தின் கீழ் மைத்ரி சூப்பர் அனல்மின் திட்டம், வங்கதேசத்தின் குல்னா பிரிவில் உள்ள ராம்பாலில் அமைந்துள்ள 1320 மெகாவாட் சூப்பர் அனல்மின் நிலையம் ஆகும். இந்தியாவின் என்.டி.பி.சி லிமிடெட் மற்றும் வங்கதேச மின் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றுக்கு இடையிலான 50:50 கூட்டு முயற்சி நிறுவனமான வங்கதேசம்-இந்தியா நட்புணர்வு மின் நிறுவனம் இந்தத் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. மைத்ரீ சூப்பர் அனல்மின் நிலையத்தின் முதல் அலகு 2022ம் ஆண்டு செப்டம்பரில் இரு பிரதமர்களாலும் கூட்டாக திறந்து வைக்கப்பட்டது மற்றும் 2 வது அலகு 2023 நவம்பர் 1 அன்று திறந்து வைக்கப்படும். மைத்ரீ சூப்பர் அனல்மின் நிலையத்தை இயக்குவது வங்கதேசத்தின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்தும். இந்தத் திட்டங்கள் பிராந்தியத்தில் இணைப்பு மற்றும் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தும்.

- R. **ஹரிகிருஷ்ணன்**




# "விடுதலை போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு" தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சிறப்பு மலர்கள் வெளியீடு

"விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு" தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள சிறப்பு மலர்களை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டார். இந்தச் சிறப்பு மலர்களை மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி பெற்றுக்கொண்டார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நவ.1 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "விடுதலை போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு" (தமிழ் நூல்) மற்றும் "Tamil Nadu's Contribution to the Freedom Struggle" (ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்) ஆகிய சிறப்பு மலர்களை வெளியிட, மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி பெற்றுக் கொண்டார்.

மு.க.ஸ்டாலின் முதல்வராகப் பதவியேற்று முதன்முதலாக 15.08.2021 அன்று சுதந்திரத் திருநாளன்று சென்னை தலைமைச் செயலக கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய உரையின்போது, இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு தமிழ்நாடு அளித்த பங்களிப்பு குறித்த முழுமையான ஆவணம் ஒன்றை தயாரித்து தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடும் என்று அறிவித்தார்.

அவ்வறிவிப்பினை செயல்படுத்தும் விதமாகவும், தமிழ்நாட்டு தியாகிகளைப் போற்றி பெருமைப்படுத்தும் வகையிலும், விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு குறித்த ஆவணத்தினை தயார்செய்ய, சென்னை லயோலா கல்லூரி முன்னாள் தலைவர் பெர்னாட் டி சாமி தலைமையில், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் வரலாற்றுப் பேராசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி, தமிழ்நாடு பாடநூல் கழக இணை இயக்குநர் சங்கர சரவணன், எழுத்தாளர் ஸ்டாலின் குணசேகரன், தமிழ்நாடு ஆவண காப்பக ஆய்வு அதிகாரி விஜயராஜா ஆகியோர்கள் ஆலோசனைக்குழு உறுப்பினர்களாகவும்;

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக பேராசிரியர் என். தனலட்சுமி, ஸ்டெல்லா மேரி கல்லூரி உதவிப் பேராசிரியர் சிந்தியா ஜூட், லயோலா கல்லூரி உதவிப் பேராசிரியர் ஏ. அற்புதச் செல்வி, லயோலா கல்லூரி இணைப் பேராசிரியர் எல். செல்வநாதன், லயோலா கல்லூரி உதவிப் பேராசிரியர் சேவியர், சென்னை கிறிஸ்தவக் கல்லூரி உதவிப் பேராசிரியர் கே. அசோக், ராஜபாளையம், ராஜூஸ் கல்லூரி முன்னாள் முதல்வர் வி. வெங்கட்ராமன், அழகப்பா கல்லூரி உதவிப் பேராசிரியர் டி. பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு மெய்நிகர் பல்கலைக்கழக ஆய்வாளர் செந்தில் குமரன் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் (வெளியீடுகள்) இரா. அண்ணா ஆகிய பிற உறுப்பினர்களைக் கொண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு, இச்சிறப்பு மலர் தயார் செய்யப்பட்டுள்ளது.

இச்சிறப்பு மலரில், அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர் சி. நடராஜன் எழுதிய "தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்டத்தின் சுருக்கமான வரலாறு", பஞ்சாப் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ராஜேஷ் வெங்கட சுப்பிரமணியன் எழுதிய "இந்திய தேசிய வாதமும், சங்கத் தமிழ் இலக்கியமும்", புதுடெல்லி ஜவஹர்லால் நேரு ஆய்வு மையத்தைச் சேர்ந்த வேலாயுதம் சரவணன் மற்றும் வீரமணி எழுதிய "தமிழ்நாட்டில் பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஓர் ஆய்வு செய்யப்படாத வரலாறு", ராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி இணைப் பேராசிரியர் கே. ராஜேஷ் குமார் எழுதிய "தமிழ்நாட்டில் விவசாயிகள் எழுச்சி (1920-1947)", சிக்கிம் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் வி. கிருஷ்ணா ஆனந்த் எழுதிய "தேசிய வாதமும் தமிழ்நாட்டின் உழைக்கும் வர்க்கமும்", எழுத்தாளர் டாக்டர் தியோடர் பாஸ்கரன் எழுதிய "சுதந்திரப் போராட்டமும், தமிழ்நாட்டின் வெள்ளித்திரையும்", சென்னை தியாகராய கல்லூரி முன்னாள் தலைவர் எஸ்.என். நாகேஸ்வரராவ் எழுதிய "இந்தியாவுடன் இணைதல்; புலம்பெயர் தமிழர்களும் இந்திய சுதந்திரப் போராட்டமும்", ராணிப்பேட்டை அப்துல் ஹக்கிம் கல்லூரி உதவிப் பேராசிரியர் முகமது ஹாசன் எழுதிய "அரசியல் உரை மற்றும் தேசியவாத கதைகள்; காலனித்துவ தமிழ்நாட்டில் தடைசெய்யப்பட்ட புத்தகங்கள்";

ராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி முன்னாள் முதல்வர் டாக்டர் வி. வெங்கட்ராமன் எழுதிய "பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ், கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் இறக்குமதி; காலனித்துவ தமிழ்நாட்டில் பொதுவுடைமைவாதிகளின் எழுத்துக்களுக்கான முக்கிய மேடை (1925-1945)", பிஹார் பாபா சாஹேப் பீமாராவ் அம்பேத்கர் பல்கலைக்கழக பேராசிரியர் கவுதம் சந்திரா எழுதிய "காலனித்துவ மதராசில் கல்வி, வேலையின்மை மற்றும் சுதந்திரப் போராட்டம்", ஸ்டெல்லா மேரி கல்லூரி உதவிப் பேராசிரியர் சிந்தியா ஜூட் எழுதிய "மாணவர் இயக்கங்களும் சுதந்திரப் போராட்டமும்-1", ராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி உதவிப் பேராசிரியர் டி. எபிஜேம்ஸ் எழுதிய "மாணவர் இயக்கங்கள் மற்றும் சுதந்திரப் போராட்டம் -2";

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி முதல்வர் எம். ஆரோக்கிய சாமி சேவியர் எழுதிய "சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டு கிறிஸ்தவர்களின் பங்களிப்புகள்", திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி இயக்குநர் ஜே. ராஜாமுகமது எழுதிய "சுதந்திரப் போராட்டத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்புகள்", ராஜபாளையம் ராஜூஸ் கல்லூரி முன்னாள் முதல்வர் வி. வெங்கட்ராமன் எழுதிய "தமிழ்நாடு சட்டமறுப்பு இயக்கத்தில் ஐரோப்பிய மேட்டுக்குடியினரின் காந்திய ஆதரவு அணுகுமுறை (1930-1932)", சென்னை கிறிஸ்தவக் கல்லூரி உதவிப் பேராசிரியர் கே. அசோக், பி. சுமபாலா மற்றும் டாக்டர் எஸ். தீபிகா ஆகியோர் எழுதிய "தியாகத்தின் அடையாளங்கள்; தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் நினைவுச்சின்னங்கள்", பாண்டிச்சேரி மாநில உயர்கல்வி மன்ற உறுப்பினர் எம்.பி. ராமானுஜம் எழுதிய "இந்திய தேசிய வாதமும், புதுச்சேரியின் விடுதலையும்" ஆகிய கட்டுரைகள் இச்சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, திருச்சியில் கடந்த அக்.23-ம் தேதியன்று நடந்த மருது சகோதரர்கள் நினைவு தினவிழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர், "தமிழக ஆளுநராக பதவியேற்றவுடன், நாட்டின் விடுதலைக்காக போராடியவர்களின் பெயர் பட்டியலைத் தருமாறு தமிழக அரசிடம் கேட்டிருந்தேன். தமிழக அரசுத் தரப்பில் தன்னிடம் கொடுத்த அந்தப் பட்டயலில், 40 பேரின் பெயர்கள் மட்டுமே இடம்பெற்றிருந்தது. ஆனால், தான் மேற்கொண்ட முயற்சியில் ஆயிரக்கணக்கானவர்கள் தமிழகத்தில் இருந்து சுதந்திரப் போராட்டத்துக்காக போராடி இருப்பது தெரியவந்தது" என்று பேசியிருந்தார். இதற்கு தமிழக அரசுத் தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

- K. **மாரிதுரை**

# இந்தியாவின் சாதனை!




சீனாவின் ஹாங்ஸோ நகரில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 111 பதக்கங்கள் வென்று புதிய சாதனை படைத்துள்ளது. இதில் 40 பதக்கங்களை வீராங்கனைகள் வென்றுள்ளனர்.

இந்தப் போட்டிகள் அக்டோபர் 22-ஆம் தேதி முதல் 28-ஆம் தேதி வரை நடைபெற்றன. இதில் இந்தியா 29 தங்கம், 31 வெள்ளி, 51 வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளது. சர்வதேசப் போட்டிகளில் இந்தியாவின் அதிகபட்ச பதக்க எண்ணிக்கை இதுதான். இதே நகரில் கடந்த அக்டோபர் 8-ஆம் தேதி நிறைவுற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 107 பதக்கங்கள் வென்றதே அதிகபட்சமாக இருந்தது.

பாரா ஆசியப் போட்டியில் சீனா 214 தங்கம் உள்பட 521 பதக்கங்களுடன் முதலிடத்தையும் ஈரான், ஜப்பான், தென் கொரியா, இந்தியா ஆகியவை அடுத்தடுத்த இடங்களையும் பிடித்தன.

சீனா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கை குறைவாகத் தெரிந்தாலும் கடந்த போட்டிகளில் இந்தியா வென்ற பதக்கங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் நமது நாட்டின் அபாரப் பாய்ச்சலைப் புரிந்து கொள்ள முடியும்.

191 ஆடவர், 112 மகளிர் என மொத்தம் 303 பேர் சீனாவுக்குச் சென்றதே பாரா ஆசியப் போட்டிகளில் இந்தியாவின் அதிகபட்ச பங்கேற்பு ஆகும். இது 2018-இல் பங்கேற்றதைவிட 113 பேர் அதிகமாகும். 22 விளையாட்டுப் போட்டிகளில் 43 நாடுகளில் இருந்து சுமார் 4,000-த்துக்கும் மேற்பட்டவர்களுடன் இவர்கள் போட்டியிட வேண்டி இருந்தது.

2010-ஆம் ஆண்டு சீனாவின் குவாங்ஸஜ நகரில் நடைபெற்ற முதலாவது பாரா ஆசியப் போட்டிகளில் ஒரே ஒரு தங்கம் உள்பட வெறும் 14 பதக்கங்களை மட்டுமே இந்தியா வென்றது. 2014-இல் 3 தங்கம் உள்பட 33 பதக்கங்கள், 2018-இல் 15 தங்கம் உள்பட 72 பதக்கங்களை நமது வீரர்கள் வென்றனர்.

13 ஆண்டு இடைவெளிக்குள் ஒரே ஒரு தங்கப் பதக்கத்திலிருந்து இப்போது 29 தங்கப் பதக்கம் என்பது, நாம் அனைவரும் பெருமைப்படக்கூடிய அபாரமான சாதனை ஆகும். அதேபோன்று பதக்க எண்ணிக்கையில் வெறும் 14-இல் இருந்து இப்போது 111 என்பதை எட்டியிருக்கிறோம்.

இந்திய வீரர்களும் வீராங்கனைகளும் 3 உலக சாதனைகள், பல்வேறு ஆசிய சாதனைகள், பாரா ஆசிய விளையாட்டுப் போட்டி சாதனைகளை முறியடித்திருக்கிறார்கள். இவற்றில் சில வீரர்களின் பயிற்சி, முயற்சி, பின்புலம் போன்றவை பிரமிப்பை ஏற்படுத்துகின்றன.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஜம்மு-காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் உள்ள லோய்தர் என்ற குக்கிராமத்தில் பிறந்த ஷீதல் தேவி என்ற 16 வயதுச் சிறுமியின் சாதனைகள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை. சர்வதேச அளவில், கைகளால் இல்லாமல் கால்களால் அம்பெய்தும் ஒரே வீராங்கனை இவர்தான்.

சிறிய வயதிலேயே “போகோமெலியா’ என்ற நோயால் பாதிக்கப்பட்டதால் கைகள் வளரவே இல்லை. செயற்கை கைகள் பொருத்த மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இந்திய ராணுவம் இவரது கிராமத்தில் நடத்திய ஒரு நிகழ்ச்சியில் இவரது திறமை வெளிப்பட்டது. அதன் பின்னர் கல்வி, மருத்துவம், விளையாட்டுக்கான பயிற்சி என அனைத்து உதவிகளையும் ராணுவத்தினர் செய்தனர்.

தொடக்கத்தில் வில்லை எடுப்பதற்கே சிரமப்பட்ட இவர், பாரா ஆசியப் போட்டியில் வில்வித்தையில் காம்பவுண்ட் பிரிவில் மகளிர் தனிநபர், கலப்பு இரட்டையர் ஆகியவற்றில் தங்கமும், மகளிர் இரட்டையர் பிரிவில் வெள்ளியும் வென்று உலகை வியப்பில் ஆழ்த்தினார்.

இவரைப் போன்ற இன்னொரு சாதனையாளர் உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த நீரஜ் யாதவ். ஆடவர் ஈட்டி எறிதல் எஃப்55 பிரிவில் தங்கம் வென்றார். இப்போது 39 வயதாகும் இவர் 7 வயதில் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார். இருப்பினும் மனம் தளராமல் விளையாட்டுப் போட்டிகளுக்காகப் பயிற்சி பெற்றார். 2005 முதல் 2012 வரை சக்கர நாற்காலியில் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்றார். 2015-க்குப் பிறகு வட்டு எறிதல், குண்டு எறிதல், ஈட்டி எறிதல் போட்டிகளில் பதக்கங்களாகக் குவித்து வருகிறார்.

மகாராஷ்டிர மாநிலம், நாசிக்கில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் ஐந்து குழந்தைகளில் ஒருவராகப் பிறந்த திலிப் காவிட் 4 வயதில் விபத்தில் ஒரு கையை இழந்தபோதும் தன்னம்பிக்கையுடன் பயிற்சி மேற்கொண்டதால் 400 மீ. டி47 பிரிவில் தங்கம் வென்று சாதித்துள்ளார்.

பாரா ஆசியப் போட்டிகளில் நீளம் தாண்டுதல் டி64 பிரிவில் தர்மராஜ் சோலைராஜ், பாட்மின்டன் மகளிர் எஸ்யு5 பிரிவில் துளசிமதி முருகேசன் ஆகியோர் தங்கமும், ஆடவர் உயரம் தாண்டுதல் டி63 பிரிவில் மாரியப்பன் தங்கவேலு வெள்ளியும் வென்று தமிழகத்துக்கும், நாட்டுக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

மத்திய அரசின் முன்னெடுப்புகளான, கிராம அளவில் “கேலோ இந்தியா’, “ஒலிம்பிக் பதக்க மேடை இலக்குத் திட்டம்‘ போன்றவையும் மாநில அரசுகளின் ஊக்குவிப்பும் வீரர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதன் காரணமாக அடுத்தடுத்த சர்வதேசப் போட்டிகளில் இந்தியாவால் 100-க்கும் மேற்பட்ட பதக்கங்களைக் குவிக்க முடிந்துள்ளது.

தகுந்த நேரத்தில் திறமையைக் கண்டுபிடித்து சரியான முறையில் பயிற்சி அளித்தால் நமது இளைஞர்கள் விண்ணைத் தொடும் சாதனையைப் புரிவார்கள் என்பது மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

- **ம.திலிப்குமார்**

## வாழ்க்கை என்பது ஒருவர் மண்ணின் கடனை அடைப்பது

## இங்கு வந்திருக்கும் ஒவ்வொரு அமிர்த கலசத்திற்குள் இருக்கும் மண் விலைமதிப்பற்றது

அமிர்த கலச யாத்திரையில் பிரதமர் மோடி
அக்டோபர் 31,2023



புதுதில்லியில் உள்ள கடமைப் பாதையில் என் மண் என் தேசம் இயக்கத்தின் அமிர்தக் கலச யாத்திரை நிறைவு நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி 31.10.2023 அன்று பங்கேற்றார். இந்த நிகழ்ச்சி விடுதலையின் அமிர்தப் பெருவிழாவின் நிறைவாகவும் அமைந்தது. இந்த நிகழ்ச்சியின் போது, அமிர்தப் பூங்கா மற்றும் அமிர்தப் பெருவிழா நினைவுச் சின்னத்திற்கு அடிக்கல் நாட்டிய பிரதமர், நாட்டின் இளைஞர்களுக்கான எனது இளைய பாரதம் - எனது பாரதம் (மேரா யுவ பாரத்' - மை பாரத்) தளத்தை தொடங்கி வைத்தார்.

சிறப்பாக செயல்படும் முதல் 3 மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்கள் மற்றும் அமைச்சகங்கள் அல்லது துறைகளுக்கு விடுதலையின் அமிர்தப் பெருவிழா விருதுகளை திரு நரேந்திர மோடி வழங்கினார். ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசம், குஜராத் மற்றும் ஹரியானா

மாநிலங்கள் ஆகியவை முதல் 3 இடங்களைப் பிடித்து விருதுகளைப் பெற்றன. அமைச்சகங்களைப் பொறுத்தவரை வெளியுறவு அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம் ஆகியவை முதல் இடங்களையும் ரயில்வே கல்வி அமைச்சகங்கள் கூட்டமாக 3-ம் இடத்தையும் பிடித்து விருது பெற்றன.

கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளை முன்னிட்டு கடமைப் பாதை ஒரு யாகத்தைக் காண்கிறது என்று குறிப்பிட்டார். மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரையால் ஈர்க்கப்பட்டு விடுதலையின் அமிர்தப் பெருவிழா, 2021 மார்ச் 12 ஆம் தேதி தொடங்கப்பட்டதை நினைவு கூர்ந்தார். சர்தார் படேலின் பிறந்த நாளான 2023 அக்டோபர் 31 ஆன இன்று விடுதலையின் அமிர்தப் பெருவிழா நிறைவடைவதாக அவர் கூறினார். ஒவ்வொரு இந்தியரும் பங்கேற்ற தண்டி யாத்திரையை ஒப்பிட்டு, விடுதலையின் அமிர்தப் பெருவிழாவும் மக்களின் பங்கேற்பில் ஒரு புதிய சாதனையை உருவாக்கியது என்று பிரதமர் கூறினார். தண்டி யாத்திரை சுதந்திரத்தின் சுடர்களை மீண்டும் உயிர்ப்பித்தது என்று கூறிய அவர், அதேபோல் அமிர்த கால இந்தியாவின் 75 ஆண்டுகால வளர்ச்சிப் பயணத்தின் தீர்மானமாக இது மாறி இருக்கிறது என்று திரு நரேந்திர மோடி கூறினார். விடுதலையின் அமிர்தப் பெருவிழாவின் 2 ஆண்டு கால கொண்டாட்டங்கள் என் மண் என் தேசம் இயக்கத்தின் மூலம் நிறைவடைவதாக அவர் தெரி வித்தார். நினைவுச் சின்னத்தின் அடிக்கல் நாட்டு விழா, இன்றைய வரலாற்று சிறப்புமிக்க அமைப்பை எதிர்கால சந்ததியினருக்கு நினைவூட்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். சிறந்த செயல்திறன் கொண்ட விருதுகளைப் பெற்ற மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் அமைச்சகங்களுக்கு அவர் வாழ்த்துத் தெரிவித்தார்.

ஒரு மாபெரும் கொண்டாட்டத்திற்கு விடைகொடுக்கும்போது, (மை பாரத்) எனது பாரதம் என்ற ஒரு புதிய தீர்மானத்தைத் தொடங்குவதாக என்று அவர் சுட்டிக்காட்டினார். 21 ஆம் நூற்றாண்டில் தேசத்தைக் கட்டமைப்பதில் எனது பாரதம் ஒரு பெரிய பங்கை வகிக்கப் போகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

இந்திய இளைஞர்களின் கூட்டு வலிமையை சுட்டிக்காட்டிய பிரதமர், இந்தியாவின் இளைஞர்கள் ஒவ்வொரு இலக்கையும் எவ்வாறு ஒழுங்கமைத்து அடைய முடியும் என்பதற்கு என் மண் என் தேசம் இயக்கம் ஒரு நேரடி எடுத்துக்காட்டு என்று அவர் கூறினார். நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் எண்ணற்ற இளைஞர்களின் பங்களிப்பை எடுத்துரைத்த பிரதமர் திரு நரேந்திர மோடி, நாடு முழுவதிலுமிருந்து 8500 அமிர்தக் கலசங்கள் கடமைப் பாதையை அடைந்துள்ளதாகவும், கோடிக்கணக்கான இந்தியர்கள் பஞ்ச் பிரான் எனப்படும் ஐந்து உறுதிமொழிகளை எடுத்து, இணையதளத்தில் புகைப்படங்களைப் பதிவேற்றியுள்ளதாகவும் கூறினார்.

விடுதலையின் அமிர்தப் பெருவிழா நிறைவுக்கு மண் ஏன் ஒரு அங்கமாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை விளக்கிய பிரதமர், ஒரு கவிஞரின் வார்த்தைகளை மேற்கோள் காட்டினார். நாகரிகங்கள் செழித்து வளர்ந்த, மனிதர்கள் முன்னேறிய மண், சிறந்த முத்திரையைக் கொண்டுள்ளது என்று கூறினார். இந்திய மண்ணுக்கு விழிப்புணர்வு உள்ளது என்றும் நாகரிகத்தின் வீழ்ச்சியைத் தடுக்கும் ஒரு வாழ்க்கை வடிவம் அதற்கு உள்ளது என்றும் கூறிய திரு நரேந்திர மோடி, இந்தியா இன்னும் வலுவாக இருந்தாலும் பல நாகரிகங்கள் எவ்வாறு சரிந்தன என்பதைக் குறிப்பிட்டார். இந்திய மண் ஆன்மீகத்தின் மீது ஒரு ஈர்ப்பை உருவாக்குகிறது என்று அவர் கூறினார், இந்தியாவின் வீரத்தின் எண்ணற்ற கதைகளை எடுத்துரைத்த அவர், ஷாஹீத் பகத் சிங்கின் பங்களிப்புகளையும் குறிப்பிட்டார். ஒவ்வொரு குடிமகனும் தாய்நாட்டின் மண்ணில் எவ்வாறு ஆழமாக வேரூன்றியுள்ளார் என்பதை எடுத்துரைத்த பிரதமர், இந்திய மண்ணுக்கான கடன்களை திருப்பிச் செலுத்தாவிட்டால் வாழ்க்கையில் என்ன பலன் என்று கேள்வி எழுப்பினார். தில்லிக்கு வந்துள்ள ஆயிரக்கணக்கான அமிர்தக் கலசத்தின் மண் அனைவருக்கும் கடமையின் உணர்வை நினைவூட்டும் என்றும், வளர்ந்த பாரதத்தின் உறுதியை அடைய ஒவ்வொருவருக்கும் ஊக்கமளிக்கும் என்றும் அவர் கூறினார். தேசத்தைக் கட்டமைப்பதில் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

நாடு முழுவதிலுமிருந்து மரக்கன்றுகளுடன் நிறுவப்படும் அமிர்தப் பூங்கா, வரும் தலைமுறை யினருக்கு ஒரே பாரதம் உன்னத பாரதம் என்பது பற்றிக் கற்பிக்கும் என்று பிரதமர் கூறினார். அனைத்து மாநிலங்களின் மண்ணைச் சேர்ந்த 75 பெண் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள கலைப்படைப்புகள் குறித்து பிரதமர் கூறினார்.

சுமார் 1000 நாள் நடைபெற்ற விடுதலையின் அமிர்தப் பெருவிழா இயக்கத்தின் மிகவும் சாதகமான தாக்கம் இந்தியாவின் இளம் தலைமுறையினர் மீது ஏற்பட்டுள்ளது என்று பிரதமர் தெரிவித்தார். இன்றைய தலைமுறையினர் அடிமைத்தனத்தை அனுபவிக்கவில்லை என்றும், சுதந்திர இந்தியாவில் பிறந்த முதல் பிரதமர், தாம்தான் என்றும் அவர் கூறினார். அந்நிய ஆட்சியின் போது சுதந்திரத்திற்கான இயக்கம் இல்லாத ஒரு தருணம் கூட இல்லை என்பதையும், எந்தவொரு பிரிவினரும் அல்லது பிராந்தியமும் இதில் இருந்து விடுபடவில்லை என்று அவர் கூறினார்.

அமிர்தப் பெருவிழா, ஒரு வகையில், வரலாற்றின் காணாமல் போன பக்கங்களை எதிர்கால சந்ததியினருக்குக் கொண்டு சேர்த்துள்ளது என்று பிரதமர் கூறினார். இந்திய மக்கள் அமிர்தப் பெருவிழாவை மக்கள் இயக்கமாக மாற்றியுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். இல்லம் தோறும் தேசியக் கொடி இயக்கத்தின் வெற்றி ஒவ்வொரு இந்தியரின் வெற்றி என்று அவர் கூறினார். சுதந்திரப் போராட்டத்தில் தங்கள் குடும்பங்கள் மற்றும் கிராமங்களின் பங்களிப்பைப் பற்றி மக்கள் அறிந்து கொண்டனர் என்றும் மாவட்ட வாரியாக சுதந்திரப் போராட்ட வீரர்களின் தரவுத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலையின் அமிர்தப் பெருவிழாக் காலத்தில் இந்தியாவின் சாதனைகளை எடுத்துரைத்த பிரதமர், உலகின் முதல் 5 பொருளாதாரங்களுக்கு இந்தியா முன்னேறியது என்றும் சந்திரயான் 3 வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது எனவும் ஜி20 உச்சிமாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டது என்றும் கூறினார். அதேபோல் ஆசிய விளையாட்டு மற்றும் ஆசிய பாரா விளையாட்டுகளில் 100 க்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்று வரலாற்றுச் சாதனை படைத்தது, புதிய நாடாளுமன்றக் கட்டடம் திறப்பு விழா, மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதா நிறைவேற்றப்பட்டது ஆகியவற்றையும் அவர் குறிப்பிட்டார். ஏற்றுமதி, விவசாய விளைபொருட்கள், வந்தே பாரத் ரயில் கட்டமைப்பின் விரிவாக்கம், அமிர்த பாரத ரயில் நிலைய இயக்கம் தொடக்கம், நாட்டின் முதல் பிராந்திய விரைவு ரயில் நமோ பாரத், 65,000 க்கும் மேற்பட்ட அமிர்த நீர் நிலைகளை உருவாக்குதல், இந்தியாவின் சொந்த 5ஜி அறிமுகம் மற்றும் விரிவாக்கம், உள்கட்டமைப்பு இணைப்பை மேம்படுத்த பிரதமரின் விரைவு சக்திப் பெருந்திட்டத்தின் அறிமுகம் போன்றவற்றையும் அவர் சுட்டிக்காட்டினார்.

விடுதலையின் அமிர்தப் பெருவிழாவின்போது, ராஜபாதையில் இருந்து கடமைப் பாதைக்கான பயணத்தை நாடு நிறைவு செய்தது என்று அவர் கூறினார். அடிமைத்தனத்தின் பல அடையாளங்களை நீக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்தியா கேட்டில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் சிலை, கடற்படைக்குப் புதிய சின்னம், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு ஊக்கமளிக்கும் பெயர்கள், பழங்குடியினர் பெருமை தினம், சாஹிப்சாதே நினைவாக வீர பாலகர் தின பிரகடனம், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 14 அன்று பிரிவினை துயரத்தை நினைவுகூரும் தினம் போன்றவற்றையும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு விசயத்தின் முடிவு எப்போதுமே புதிய ஒன்றின் தொடக்கத்தைக் குறிக்கிறது என்று பிரதமர் கூறினார். அமிர்தப் பெருவிழாவின் நிறைவில் எனது பாரதம் (மை பாரத்) தொடங்கப்பட்டதை குறிப்பிட்ட அவர், இந்த எனது பாரதம் இந்தியாவின் இளைஞர் சக்தியின் பிரகடனம் என்றார். நாட்டின் ஒவ்வொரு இளைஞரையும் ஒரே தளத்தில் கொண்டு வரவும், தேசத்தைக் கட்டமைப்பதில் அதிக பங்கேற்பை உறுதிப்படுத்தவும் இது ஒரு சிறந்த தளமாக மாறும் என்று கூறினார். மை பாரத் இணையதளம் தொடங்கப்பட்டது குறித்துப் பேசிய அவர், இளைஞர்களுக்காக நடத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த தகவல்கள் இந்தத் தளத்தில் சேர்க்கப்படும் என்றார். இளைஞர்கள் இயன்றவரை இதனுடன் இணைந்து, இந்தியாவுக்குப் புதிய ஆற்றலைக் கொடுக்க வேண்டும் எனவும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

ஒவ்வொரு குடிமகனின் பொதுவான தீர்மானங்களை நிறைவேற்றுவதே இந்தியாவின் சுதந்திரம் என்று கூறியதோடு, அதை ஒற்றுமையுடன் பாதுகாக்க வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார். 2047-ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கான உறுதிப்பாட்டைக் குறிப்பிட்ட அவர், சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் போது இன்றைய இந்த சிறப்பான நாள் தேசத்தால் நினைவுகூரப்படும் என்றார். நாம் எடுத்த உறுதியையும், வரும் தலைமுறைக்கு நாம் அளித்துள்ள வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டும் என்று பிரதமர் கூறினார். வளர்ந்த நாடு என்ற இலக்கை அடைய ஒவ்வொரு இந்தியரின் பங்களிப்பும் முக்கியம் என்று அவர் தெரிவித்தார். அமிர்தப் பெருவிழாவின் மூலம் வளர்ந்த பாரதத்தின் அமிர்த காலத்தின் புதிய பயணத்தைத் தொடங்குவோம் என்று கூறி, பிரதமர் திரு நரேந்திர மோடி தமது உரையை நிறைவு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அனுராக் சிங் தாக்கூர், மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு ஜி. கிஷன் ரெட்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னணி

**என் மண் என் தேசம்**

என் மண் என் தேசம் இயக்கம் என்பது நாட்டிற்காக மிக உயர்ந்த தியாகம் செய்த வீரர்கள் மற்றும் வீரங்கனைகளுக்கு அஞ்சலி செலுத்துவதாகும். மக்கள் பங்களிப்புடன், இந்த இயக்கம் நாடு முழுவதும் கிராமம், வட்டாரம், நகர்ப்புற உள்ளாட்சி, மாநில மற்றும் தேசிய அளவில் பல நடவடிக்கைகள் மற்றும் விழாக்களை உள்ளடக்கியதாக இருந்தது. உன்னத தியாகம் செய்த அனைத்து மாவீரர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கும் வகையில் நினைவுச்சின்னம் கட்டுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் இதில் நடைபெற்றன. நினைவுச் சின்னத்துடன் மக்கள் எடுத்த ‘பஞ்ச பிராண்’ ஐந்து உறுதிமொழிகள் பழங்குடி இனங்களின் மரக்கன்றுகளை நடுதல், அமிர்தப் பூங்காவை உருவாக்குதல், சுதந்திரப் போராட்ட வீரர்களின் குடும்பங்களை கௌரவிக்கும் பாராட்டு விழாக்கள் ஆகியவையும் நடைபெற்றன.

36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 2.3 லட்சத்துக்கும் மேற்பட்ட நினைவுச் சின்னங்கள் கட்டப்பட்டதன் மூலம் இந்த இயக்கம் ஒரு பெரிய வெற்றியைப் பெற்றது. கிட்டத்தட்ட 4 கோடி பஞ்ச் பிராண் உறுதிமொழி ஏற்கப்பட்டு புகைப்படங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 2 லட்சத்துக்கும் அதிகமான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு 2.36 கோடிக்கும் அதிகமான நாட்டு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. அத்துடன் நாடு முழுவதும் 2.63 லட்சம் அமிர்தப் பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

என் மண் என் தேசம் இயக்கத்தில் அமிர்தக் கலச யாத்திரையும் அடங்கும். இதில் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்தும், நகர்ப்புறங்களில் உள்ள வார்டுகளிலிருந்தும் மண் மற்றும் அரிசி தானியங்கள் சேகரிக்கப்பட்டன. வட்டார அளவில் அனைத்து கிராமங்களின் மண்ணும் கலக்கப்பட்டு பின்னர் மாநில தலைநகருக்கு அனுப்பப்பட்டது. ஆயிரக்கணக்கான அமிர்தக் கலச யாத்ரிகர்களுடன் மாநில அளவில் இருந்து மண் தேசியத் தலைநகருக்கு அனுப்பப்பட்டது.

30-10-2023 அன்று நடைபெற்ற அமிர்தக் கலச யாத்திரையில், அந்தந்த வட்டங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தங்கள் கலசத்திலிருந்து மண்ணை ஒரு பெரிய அமிர்தக் கலசத்தில் ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உணர்வில் கலந்தன. பிரதமரால் அடிக்கல் நாட்டப்பட்ட அமிர்தப் பூங்கா மற்றும் அமிர்தப் பெருவிழா நினைவுச்சின்னம் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் சேகரிக்கப்பட்ட மண்ணிலிருந்து கட்டப்படும்.

விடுதலையின் அமிர்தப் பெருவிழா நிகழ்ச்சியின் இறுதி நிகழ்வாக என் மண் என் தேசம் இயக்கம் திட்டமிடப்பட்டது. இந்திய சுதந்திரத்தின் 75 ஆண்டுகளைக் கொண்டாடும் வகையில் விடுதலையின் அமிர்தப் பெருவிழா 12 மார்ச் 2021 அன்று தொடங்கியது. அதன் பின்னர் நாடு முழுவதும் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் பொதுமக்களின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டன.

**எனது பாரதம் (மை பாரத்)**

மேரா யுவ பாரத் - மை பாரத் (எனது இளைய பாரதம் - எனது பாரதம்) நாட்டின் இளைஞர்களுக்கு ஒரு நிலையான முழு அரசுத் தளமாக செயல்பட ஒரு தன்னாட்சி அமைப்பாக நிறுவப்படுகிறது. நாட்டின் ஒவ்வொரு இளைஞருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குவதற்கான பிரதமரின் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, மை பாரத் அரசின் முழு நடைமுறைகளிலும் ஒரு சாத்தியமான செயல்முறையை வழங்க, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும். இதனால் அவர்கள் தங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ளவும் வளர்ந்த பாரதத்தைக் கட்டமைப்பதற்காகப் பங்களிக்கவும் முடியும். இளைஞர்களை சமூக மாற்றத்துக்கான முகவர்களாகவும், தேசத்தை உருவாக்குபவர்களாகவும் மாற ஊக்குவிப்பதும், அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான இணைப்புப் பாலமாக செயல்படுவதும் மை பாரத் (எனது பாரதம்) திட்டத்தின் நோக்கமாகும். அந்த வகையில், ‘மை பாரத்’ (எனது பாரதம்) நாட்டில் இளைஞர்களின் தலைமையிலான வளர்ச்சிக்கு ஒரு பெரிய ஊக்கத்தை அளிக்கும். - PIB

**- நா வீ சிவசங்கர்**



# தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் ஆவணம் வெளியீடு

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 02.11.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூக (Tamil Nadu Digital Transformation Strategy - DiTN) ஆவணத்தை வெளியிட்டார்.

2021-22ஆம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையில், விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுகக்கூடிய மற்றும் பதிலளிக்கும் வகை யிலமைந்த, வெளிப்படையான நிருவாகத்தைக் குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மின்னாளுகையைப் படிப்படியாக அரசின் அனைத்து மட்டங்களிலும் புகுத்தி, அதன்மூலம் முழுமையானதொரு அரசாங்கத்தை எய்திடும் வகையில் "டிஜிட்டல் தமிழ்நாடு திட்டம்" செயல்படுத்தப்படும். மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட மற்றும் அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசுத் துறைகளின் செயல்பாடுகள் படிப்படியாக மின்மயமாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசின் ஆளுமை மற்றும் நிர்வாகத்தின் செயல்திறனை மேம்படுத்திடவும், டிஜிட்டல் ஆளுமை மற்றும் அரசின் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காகவும், தற்போதுள்ள மற்றும் எதிர்கால கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் அமைப்புகளைக் கருத்தில் கொண்டும் தமிழ்நாட்டில் முதல்முறையாக தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் (DiTN) வகுக்கப்பட்டுள்ளது. அரசின் துறைகள் தங்களுக்கான டிஜிட்டல் உருமாற்ற வியூகம் உருவாக்குவதற்கும், அதனை செயல்படுத்துவதற்கும் ஒரு வழிகாட்டியாக தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூக ஆவணம் பயன்படும்.

அனைத்துத் துறைகளும் தங்களது முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (Key Performance Indicators) மற்றும் பயன்களை (Outcomes) எய்துவதற்கு தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் உதவும். மேலும், தமிழ்நாட்டு மக்களுக்கு விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுகக்கூடிய, பதிலளிக்கக்கூடிய மற்றும் வெளிப்படையான (SMART Swift Monitorable, Accessible, Responsive and Transparent) நிர்வாகத்தை வழங்கும். தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம், டிஜிட்டல் முதிர்ச்சியை மதிப்பிடுவது முதல் தகவல்தொழில்நுட்ப வியூகத்தைச் செயல்படுத்துவது வரையிலான அனைத்து வழிகாட்டுதல்களையும் வழங்கும்.

தமிழ்நாட்டில் டிஜிட்டல் மயமாக்கும் செயல் முறையை மேலும் வலுப்படுத்துதல், தொலைதூர இடங்கள் உட்பட மாநிலம் முழுவதும் தேவையான டிஜிட்டல் உள்கட்டமைப்பை பொதுமக்களுக்கு குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு வழங்குதல், மாநிலத்தை புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவுக்கான மையமாக மாற்றுதல், செயலிகள், வலைத்தளங்கள், கியோஸ்க்குகள் (KIOSK) போன்றவற்றின் மூலம் பொதுமக்களுக்கு அரசு சேவைகள் வசதியாக கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் முதல் மற்றும் இரண்டாம் நிலை நகரங்களுடன் டிஜிட்டல் இணைப்புகளை மேம்படுத்துதல் போன்றவை தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

- P.கார்த்திகேயன்

# புலிகள் பாதுகாப்புத் தொடர்பான கலைக் கண்காட்சியை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தில்லியில் தொடங்கி வைத்தார்



குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு 03.11.2023 அன்று புதுதில்லியில் "அமைதியான உரையாடல்: அழிவின் விளிம்பில் இருந்து மையத்திற்குக் கொண்டு வருதல்" என்ற தலைப்பிலான கலைப்பொருட்கள் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம், சூழலியல் தொடர்பான பணிகளில் ஈடுபடும் சங்கலா அறக்கட்டளையுடன் இணைந்து இந்தக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத்தலைவர், உலகில் உள்ள மொத்தப் புலிகளின் எண்ணிக்கையில் 70 சதவீதம் இந்தியாவில் காணப்படுவதாகக் கூறினார். புலிகள் காப்பகங்கள் மற்றும் தேசிய பூங்காக்களைச் சுற்றி வாழும் மக்கள், புலிகள் அதிகரிப்பில் முக்கியப் பங்களிப்பைக் கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். புலிகள் காப்பகப் பகுதிகளைச் சுற்றியுள்ள மக்களுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையிலான உறவை கலைப் பொருட்கள் மூலம் இந்தக் கண்காட்சி வெளிப்படுத்துகிறது என்று அவர் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றத்தின் விளைவுகளைக் கருத்தில்கொண்டு, முழுமையான மற்றும் கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குடியரசுத்தலைவர் வலியுறுத்தினார். சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக மட்டுமல்லாமல் மனித குலத்தின் நன்மைக்காகவும், பழங்குடி சமூகங்களின் வாழ்க்கை விழுமியங்களை நாம் பின்பற்ற வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார், இயற்கையோடு இணைந்து வாழ்ந்தால் வளமான, மகிழ்ச்சியான வாழ்க்கை சாத்தியம் என்பது குறித்து அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று குடியரசுத்தலைவர் கூறினார்.


கட்டுப்பாடற்ற பொருள்நிலை கொள்கை, மோசமான வணிக நடைமுறைகள் மற்றும் பேராசை ஆகியவை துன்பத்தையும் கலக்கத்தையும் கொண்ட ஒரு பூமியை நமக்கு விட்டுச் சென்றுள்ளன என்று அவர் கூறினார். உணவு மற்றும் நீர்ப் பாதுகாப்பு குறித்த கவலைகளைப் பருவநிலை மாற்றம் எழுப்பியுள்ளது என்று அவர் தெரிவித்தார். பாரம்பரிய மற்றும் நவீன சிந்தனை ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்று கூறிய அவர், இதன் மூலம் நமது பாதுகாப்பு மற்றும் ஆபத்துத் தணிப்பு உத்திகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். உள்நாட்டு அறிவாற்றலைப் பாதுகாத்து, மேம்படுத்தி, பயன்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார். வனப்பகுதிகளில் உள்ள மக்கள், சமூகத்தில் அவர்களின் உரிமைகள் மற்றும் அங்கீகாரத்தை இழக்காமல் இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

- V.சந்தோஷ்குமார்

## டிஎன்பிஎஸ்சி தேர்வு முடிவுகள்:

# 52 ஆயிரம் விடைத்தாள்களை திருத்த 9 மாதங்களா?

## அன்புமணி ராமதாஸ்!




52 ஆயிரம் விடைத்தாள்களை திருத்த 9 மாதங்களா? டிஎன்பிஎஸ்சி தொகுதி-2 முடிவுகளை உடனே வெளியிட வேண்டும்! என பா.ம.க. தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அறிக்கை வாயிலாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக அரசுத் துறைகளில் தொகுதி 2, 2 ஏ பணியிடங்களுக்கு தகுதியானவர்களை தேர்ந்தெடுக்க கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் அறிவிக்கப்பட்ட போட்டித் தேர்வுகளின் முடிவுகள் இன்று வரையிலும் வெளியிடப்படவில்லை. தமிழக அரசின் முக்கியப் பணிகளுக்கு பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறையில் அரசுப் பணியாளர் தேர்வாணையம் காட்டும் அலட்சியம் கண்டிக்கத்தக்கது ஆகும்.

தமிழ்நாடு அரசுத் துறைகளில் காலியாக உள்ள இரண்டாம் தொகுதி பணியிடங்கள் 121, தொகுதி 2ஏ பணியிடங்கள் 5097 ஆகியவற்றை நிரப்புவதற்கான ஆள்தேர்வு அறிவிக்கை கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ஆம் நாள் வெளியிடப்பட்டது. அத்தேர்வுகளில் பங்கேற்பதற்காக விண்ணப்பித்த 11.78 லட்சம் பேரில், 9.94 லட்சம் பேர் கடந்த ஆண்டு மே மாதம் 21-ஆம் நாள் நடத்தப்பட்ட முதனிலைத் தேர்வை எழுதினார்கள். அவர்களில் இருந்து ஒரு பணிக்கு 10 பேர் வீதம் 52,180 பேர் முதன்மைத் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். கடந்த பிப்ரவரி 25-ஆம் நாள் நடத்தப்பட்ட முதன்மைத் தேர்வுகளை அவர்களில் பெரும்பான்மையினர் எழுதினர். அத்தேர்வுகளின் முடிவுகள் கடந்த ஏப்ரல் மாதமே வெளியிடப் படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 9 மாதங்களாகியும் இன்று வரை வெளியிடப்படவில்லை.

தொகுதி 2, 2ஏ பணிகளுக்கான முதன்மைத் தேர்வு முடிவுகளை 9 மாதங்களாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிடாமல் இருப்பதற்கு நியாயமான காரணங்கள்

எதுவும் இல்லை. முதன்மைத் தேர்வை எழுதியவர்கள் வெறும் 52,000 பேர் மட்டும் தான். முதன்மைத் தேர்வில் ஒவ்வொரு போட்டியாளரும் 2 தாள்களை எழுத வேண்டும்; அதன்படி மொத்தம் 1.04 லட்சம் விடைத்தாள்களை திருத்த வேண்டும். அவை அனைத்தும் இரண்டே வகைப்பட்டவை தான். அவற்றை மிக எளிதாக திருத்தி விட முடியும். ஆனாலும், அப்பணியை அரசுப் பணியாளர் தேர்வாணையம் செய்யவில்லை.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி 2 பணிகளுக்கு முதன்மைத் தேர்வு நடத்தி 7 மாதங்கள் கழித்து கடந்த செப்டம்பர் மாத இறுதியில் தான், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் குடிமைப் பணிகளுக்கான முதன்மைத் தேர்வுகளை நடத்தியது. அந்தத் தேர்வுகளில் 14,624 தேர்வர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொருவரும் 9 தாள்களை எழுதினார்கள். அதன்படி, மொத்தம் 1 லட்சத்து 34,616 தாள்கள் திருத்தப்பட வேண்டும். அந்த தாள்கள் மொத்தம் 4 வகையானவை. அனைத்துத் தாள்களையும் அக்டோபர் மாதத்தில் திருத்தி கடந்த நவம்பர் ஒன்றாம் தேதி முடிவை அறிவித்திருக்கிறது மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம். ஆனால், அதைவிட குறைவான பணிச்சுமை கொண்ட தொகுதி 2 முதன்மைத் தேர்வுகளின் முடிவுகளை 9 மாதங்களாகியும் வெளி யிட முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம். இதிலிருந்தே தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் செயல்பாட்டு வேகத்தை மக்கள் எளிதாக புரிந்து கொள்ள முடியும்.

முடிவுகளை வெளியிடுவதில் மட்டுமல்ல... தேர்வுகளை நடத்துவதிலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அதன் செயல்திறன் இன்மையை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது. கடந்த பிப்ரவரி 25-ஆம் நாள் நடைபெற்ற முதன்மைத் தேர்வுகளின் போது, பெரும்பான்மையான மையங்களில் மிகவும் தாமதமாக தேர்வு தொடங்கப்பட்டதுடன், பல இடங்களில் தேர்வர்களுக்கு வினாத்தாள்கள் வழங்கப்பட்டு, அவற்றின் பதிவு எண்கள் தவறாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, பின்னர் திரும்ப பெறப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட குழப்பம், மன உளைச்சலால் பல தேர்வர்கள் சரியாக தேர்வு எழுத முடியவில்லை.

தமிழ்நாட்டைச் சேர்ந்த தேர்வர்கள், அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளை பொழுதுபோக்குக்காக எழுதுவதில்லை. அதில் தான் தங்களின் எதிர்காலம் இருப்பதை உணர்ந்து பல ஆண்டுகள் உழைத்து தேர்வுக்கு தயாராகின்றனர். அந்தத் தேர்வுகளை நடத்துவதிலும், முடிவுகளை வெளியிடுவதிலும் செய்யப்படும் தாமதமும், குளறுபடிகளும் தேர்வர்களின் எதிர்காலத்தை பாதிக்கும்.

இந்தியாவின் மிகக் கடுமையான குடிமைப் பணித் தேர்வுகளை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் எந்தக் குழப்பமுமின்றி 10 மாதங்களில் நடத்தி முடிவை வெளியிடுகிறது. ஆனால், நான்காம் தொகுதி தேர்வுகளை நடத்தி முடிக்க இரு ஆண்டுகளை எடுத்துக் கொள்ளும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அறிவிக்கப்பட்டு 21 மாதங்களாகியும் தொகுதி 2 தேர்வு நடைமுறைகளை முடிக்க வில்லை. கண்ணுக்குத் தெரியக் கூடிய இக்குறைகளை ஆணையம் சரி செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொகுதி 2, 2ஏ முதன்மைத் தேர்வு முடிவுகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உடனடியாக வெளியிட வேண்டும். அதுமட்டுமின்றி, இனிவரும் காலங்களில், தொகுதி 1, தொகுதி 2, 2ஏ ஆகிய தேர்வுகளை அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து 10 மாதங்களுக்குள்ளாகவும், பிற தேர்வுகளை அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து 6 மாதங்களிலும் நடத்தி முடித்து, முடிவுகளை வெளியிட பணியாளர் தேர்வாணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

- **ந.மதிவாணன்**

# ஐஐடி சென்னை மற்றும் டெல் அவிவ்

# கழிவுநீரில் இருந்து மாசுப
# பயனுள்ள ஏரோஜெல் உறிஞ்

சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி மெட்ராஸ்) மற்றும் டெல் அவிவ் பல்கலைக்கழகம், இஸ்ரேல் ஆகியவை இணைந்து கழிவுநீரில் இருந்து மாசுபாட்டை அகற்றுவதற்கான ஏரோஜெல் உறிஞ்சியை உருவாக்கியுள்ளனர்.

கிராஃபீன் மாற்றியமைக்கப்பட்ட சிலிக்கா ஏரோஜெல், தொடர்ச்சியான ஓட்டநிலைகளில் 76 சதவீதத்துக்கும் மேலாக மாசுபாடுகளை (பிபிஎம் நிலை) நீக்கி பெரிய அளவிலான நீர் சுத்திகரிப்புக்கு நிலையான வழிமுறையை அளிக்கிறது. இந்த முடிவுகளைக் கொண்டு பெரிய அளவில் மேம்படுத்த ஆராய்ச்சிக் குழுவினர் முனைப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

பெரும்பாலும் காற்றுடன் கலந்திருக்கும் மிகமிக இலகுரக திடப் பொருட்களாக ஏரோஜெல்கள் சிறந்த உறிஞ்சிகளாக (மாசுபாடுகளை அகற்றப் பயன்படுத்தும் திடப்பொருள்) செயல்படுகின்றன. அத்துடன், சரிசெய்யக்கூடிய மேற்பரப்பு வேதியியல், குறைந்த அடர்த்தி, அதிக நுண்துளை அமைப்பு போன்ற நன்மைகளும் அவற்றால் கிடைக்கப் பெறுகின்றன. இப் பொருட்கள் 'திடக் காற்று', 'உறைந்த புகை' என்றெல்லாம் எளிமையாக குறிப்பிடப்படுகின்றன.

உலக மக்கள் தொகையில் 18 சதவீத மக்கள் தொகையைக் கொண்டுள்ள இந்தியா, உலகளவிலான நீர்ஆதாரங்களில் வெறும் 4 சதவீத அளவுக்கு மட்டுமே இருப்பதால் பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டிய சூழலில் உள்ளது. எனவேதான் நீர் மாசுபாட்டை சரிசெய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக நீர் சார்ந்த தொழில்களான மருந்து மற்றும் ஜவுளி உற்பத்தித் துறைகளில் இந்த முயற்சி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஜவுளி உற்பத்தித் துறையில் மட்டும் ஆண்டுதோறும் ஏறத்தாழ 10 லட்சம் டன் அளவுக்கு நச்சு செயற்கை சாயங்கள் வெளியேற்றப்படுகின்றன. நீர்வாழ் உயிரினங்களுக்கும், சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் இதனால் கடும் அச்சுறுத்தல் ஏற்படுகிறது.




சாந்தி ஸ்வரூப் பட்நாகர் பரிசு பெற்ற பேராசிரியர் ரஜ்னிஷ் குமார் தலைமையிலான ஐஐடி மெட்ராஸ் ஆராய்ச்சிக் குழுவில், ஐஐடி மெட்ராஸ் கெமிக்கல் என்ஜினியரிங் துறையைச்

## பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்

# ாடுகளை அகற்றுவதற்கான
# நசிகளை உருவாக்கியுள்ளனர்




சேர்ந்த ஆராய்ச்சியாளர்களான திரு. சுபாஷ் குமார் சர்மா, பி.ரஞ்சனி, டெல் அவிவ் பல்கலைக் கழகத்தின் மெக்கானிக்கல் என்ஜினியரிங் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் ஹடாஸ் மாமனே ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

இக்குழுவினரின் கண்டுபிடிப்புகள் மதிப்புமிக்க இதழான நேச்சர் சயின்டிஃபிக் ரிப்போர்ட்ஸ் (https://doi.org/10.1038/s41598-023-43613-w)-ல் ஆய்வறிக்கையாக வெளி யிடப்பட்டது.

இதுபோன்ற ஆராய்ச்சியின் அவசியம் குறித்து விவரித்த ஐஐடி மெட்ராஸ்-ன் கெமிக்கல் என்ஜினியரிங் துறைப் பேராசிரியர் ரஜ்னிஷ்குமார் கூறுகையில், “கழிவுநீர் சுத்திகரிப்புக்கான உள்நாட்டுத் தொழில்நுட்பங்கள் மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கு மட்டுமின்றி, நீரின் தரத்தைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கவும், அசுத்தமான தண்ணீருடன் தொடர்புடைய சுகாதாரப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தவும் அவசியமாகிவிட்டன” எனக் குறிப்பிட்டார்.

“வழக்கமான கழிவுநீர் சுத்திகரிப்பு முறைகளைக் கொண்டு மாசுபாடுத் தடயங்களை அகற்ற முயல்வது அதிலும் குறிப்பாக மருந்து உற்பத்தித் துறையில் மிகக் கடினமாக இருந்து வருகிறது. இதனைச் சமாளிக்கும் வகையில், உறிஞ்சுதல், நவீன ஆக்சிஜனேற்ற முறை, சவ்வு வடிகட்டுதல் உள்ளிட்ட பல்வேறு முறைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் சுற்றுச்சூழலுக்கு இயைந்த இயற்கை முறை, குறைந்த செலவு, மிகத் திறமையாக மாசுக்களை நீக்கும் திறன் ஆகியவற்றின் காரணமாக ‘உறிஞ்சுதல் முறை’ விரும்பத்தக்கதாக உள்ளது” என்றார்.

இஸ்ரேலின் டெல்அவிவ் பல்கலைக்கழக மெக்கானிக்கல் என்ஜினியரிங் பிரிவு பேராசிரியர் ஹடாஸ் மாமனே கூறும்போது, “எங்களது கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட GO-SA ஏரோஜெல்களின் மேற்பரப்பு வேதியியலை மாற்றியமைத்து, குறிப்பிட்ட மாசுக்களை சுத்திகரிக்கும் வகையில் தனிப்பயனாக்க முடியும். ஏரோஜெல்களை திரும்பவும் உருவாக்கி, மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் கழிவுகள் குறைந்துகொண்டே வருவதுடன், குடிநீரை சுத்திகரிக்க ஆகும் இயக்கச் செலவுகளும் வெகுவாகக் குறையும். நீர் சுத்திகரிப்புக்கு இது நிலையான தீர்வாகவும் அமைகிறது” என்றார்.

- **தமிழ்மணி**

# விபத்தில் கணவனை இழந்த பெண்ணுக்கு வீடு கட்டி கொடுத்த போலீசார்

விருத்தாசலம் அடுத்த மணலூர் காலணியை சேர்ந்தவர் சக்திவேல் (வயது 40). கூலித் தொழிலாளியான இவர், வேலைக்கு சென்று கூலி வாங்கினால் மட்டுமே உணவு என்ற ஏழ்மை நிலையில் வசித்து வந்தார்.

இவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக தன்னை போலவே ஏழ்மை நிலையில் இருந்த முத்துலட்சுமி (35) என்ற இளம்பெண்ணை திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதிக்கு 3 ஆண், 2 பெண் குழந்தைகள் உள்ளனர். தன்னை நம்பி மனைவி, குழந்தைகள் என 6 பேர் உள்ளதை கவனத்தில் கொண்ட சக்திவேல், ஒரு நாள் கூட ஓய்வெடுக்காமல் வேலைக்கு சென்று வீடு திரும்புவார். தினமும் மாலை அவர் கொண்டு வரும் கூலி பணத்தை வைத்துதான் மறுநாள் உணவு சமைக்கும் நிலையில் வாழ்ந்து வந்தனர்.

இந்நிலையில் கொரோனா காலத்திற்கு பின்னர், தான் வசிக்கும் பகுதியில் தொடர்ந்து வேலை கிடைப்பதில் தொய்வு ஏற்பட்டது. விருத்தாசலம் சுற்றுவட்டார பகுதிகளில் வேலை கிடைத்தது. இதனால் மிகவும் கஷ்டப்பட்டு ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கினார். அதில் தினமும் வேலைக்கு சென்று குடும்பத்தை காப்பாற்றி வந்தார்.

இந்நிலையில் கடந்த மார்ச் 18-ந் தேதி, சக்திவேல் தனது மோட்டார் சைக்கிளில் வேலைக்கு சென்றார். அவர் வெண்கரும்பூர் சாலையில் சென்றபோது, நிலை தடுமாறி தானாக கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே பலியானார். இதனை சற்றும் எதிர்பாராத முத்துலட்சுமி கதறி அழுதார். 5 குழந்தைகளை எவ்வாறு கரையேற்றுவது என செய்வதறியாது திகைத்தார். சக்திவேலின் இறுதி சடங்கு முடிந்தவுடன் உறவினர்கள் சென்றுவிட்டனர்.

விபத்தில் இறந்ததால், தனது குழந்தைகள் உணவுக்கே கஷ்டப்படுவதாகவும், இன்சூரன்சு அல்லது அரசு உதவி ஏதேனும் பெற்றுத் தருமாறு விருத்தாசலம் துணை போலீஸ் சூப்பிரண்டு ஆரோக்கியராஜிடம் சக்திவேலின் மனைவி முத்துலட்சுமி மனு கொடுத்தார். இதனை பரிசீலித்த ஆரோக்கியராஜ், நேரடியாக சென்று விசாரணை நடத்தினார்.

அப்போது முத்துலட்சுமி மற்றும் அவரது குழந்தைகள் 5 பேரும் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் கழிகளை நட்டு, அதில் டிஜிட்டல் பேனர்களை கட்டி அதற்குள் வாழ்ந்து வந்தனர். இதனை கண்டு கண்கலங்கிய துணை போலீஸ் சூப்பிரண்டு ஆரோக்கியராஜ், தன்னால் முடிந்த ஏதேனும் உதவியை இக்குடும்பத்திற்கு செய்ய முடிவு செய்தார்.

விருத்தாசலம் சரகத்திற்கு உட்பட்ட போலீசாரின் வாட்ஸ் அப் குரூப்பில் இது தொடர்பாக பதிவிட்டார். இதனை பார்த்த போலீசார், போட்டி போட்டுக்கொண்டு தாங்களும் தங்களால் முடிந்த உதவியை செய்வதாக கூறினர். இவைகளை ஒருங்கிணைத்த துணை போலீஸ் சூப்பிரண்டு ஆரோக்கியராஜ், சக்திவேல் குடும்பத்தார் வசித்த இடத்தில் வீடு கட்டி கொடுக்க முடிவு செய்தார்.

முன்னதாக சக்திவேலின் பெண் குழந்தைகளான சந்தியா (16), செவ்வந்தி (12) ஆகியோரை திண்டிவனத்தில் உள்ள கருணை இல்லத்தில் சேர்த்து அங்கு படிக்க வைத்தார். ஆண் குழந்தைகளான சரண்குமார் (14), நிகாஷ் (12), நிதிஷ் (8) ஆகியோரை அதே ஊரில் உள்ள அரசு பள்ளியிலேயே படிக்க தேவையான அனைத்து உதவிகளையும் போலீசார் மூலம் செய்தார். தொடர்ந்து வீடு கட்டும் பணிகள் தொடங்கப்பட்டன. ஒரு குடும்பம் வசிப்பதற்கு தேவையான அளவிற்கு 7 ஆயிரம் சதுர அடி பரப்பில் வீடு கட்டுமான பணிகள் தொடங்கியது.

இப்பணிகளை விருத்தாசலம் சரகத்தில் உள்ள போலீசார், கட்டுமான பணிகளை மாறி மாறி மேற்பார்வையிட்டனர். வீடு கட்டுமான பணிகள் முடிந்து இறுதி வடிவம் பெற்றது. இதற்கான திறப்பு




விழாவிற்கு கடலூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ராஜாராமை அழைக்க போலீசார் முடிவு செய்தனர். அவருக்கு அழைப்பு விடுத்தனர். அவரும் வீடு திறப்பு விழாவிற்கு வர சம்மதித்தார்.

இதையடுத்து கிரகப்பிரவேச பத்திரிகை அடிக்கப்பட்டது. அந்த ஊரில் உள்ள அனைவருக்கும் வழங்கப்பட்டது. வீட்டின் வாசல், மாடிகளில் பந்தல் போடப்பட்டது. கிரகப்பிரவேசத்திற்கு வருபவர்களுக்கு உணவு சமைக்கப்பட்டது. மேலும், வீட்டை மட்டும் கட்டி கொடுத்தால், அதில் வைப்பதற்கு பொருள் வேண்டுமே என்பதை உணர்ந்த துணை போலீஸ் சூப்பிரண்டு ஆரோக்கியராஜ், வீட்டிற்கு தேவையான தொலைக்காட்சி, குளிர்சாதனபெட்டி, சிலிண்டர் இணைப்பு, கட்டில், பீரோ, பாத்திரங்கள் என அனைத்தையும் வாங்கினார்.

தாய் வீட்டு சீதனம் ஊர்வலமாக கொண்டு வருவதைப் போல அனைத்தையும், மேளதாளத்துடன் ஊர்வலமாக கொண்டு வந்து முத்துலட்சுமியின் வீட்டில் வைத்தனர். கிரகப் பிரவேசத்திற்கு வந்தவர்களுக்கு வீட்டின் மாடியில் உணவு பரிமாறும் பணியில் இருந்து, வருவோரை வரவேற்பது, வந்து செல்வோருக்கு தாம்பூலம் வழங்குவது என அனைத்து பணிகளையும் போலீசார் போட்டி போட்டுக் கொண்டு செய்தனர்.

தொடர்ந்து அங்கு வந்த போலீஸ் சூப்பிரண்டு ராஜாராமன், கருணை இல்லம் என்ற பெயரில் விருத்தாசலம் சரக போலீசாரால் கட்டப்பட்ட புதிய வீட்டினை திறந்து வைத்தார். மேலும், வீட்டின் சாவியை முத்துலட்சுமி மற்றும் அவரின் குழந்தைகளிடம் ஒப்படைத்தார். குழந்தைகளை நன்றாக படிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியதோடு, படிப்பு தொடர்பாக எந்த உதவியாக இருந்தாலும், தன்னை தொடர்பு கொள்ளுமாறு கூறினார்.

இந்த விழாவில் விருத்தாலம் இன்ஸ்பெக்டர் முருகேசன், பெண்ணாடம் இன்ஸ்பெக்டர் குமார், வேப்பூர் இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரன், மங்கலம்பேட்டை இன்ஸ்பெக்டர் சந்திரசேகர், மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரேவதி, விருத்தாசலம் சப்-இன்ஸ்பெக்டர் அய்யனார் மற்றும் போலீசார் திரளாக பங்கேற்றனர். ஏழ்மை நிலையில் இருந்த குடும்பத்திற்கு மனிதாபிமான அடிப்படையில் போலீசார் வீடு கட்டி கொடுத்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பேசும் பொருளாக மாறியுள்ளது. மேலும், விருத்தாசலம் துணை போலீஸ் சூப்பிரண்டு ஆரோக்கியராஜ் மற்றும் போலீசாருக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

**- பா.நவின்குமார்**

# சென்னை ஆவடியில் உள்ள போர் வாகன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் ஒற்றுமைக்கான ஓட்டம்

சர்தார் வல்லபாய் படேலின் 148-வது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில், சென்னை ஆவடியில் உள்ள போர் வாகன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (சிவிஆர்டிஇ) சார்பில் ஒற்றுமைக்கான ஓட்டம் நடைபெற்றது. இந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.



சிவிஆர்டிஇ-யின் இயக்குநர் திரு ராஜேஷ்குமார் காலை 9.30 மணிக்கு "ஒற்றுமைக்கான ஓட்டத்தை" கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய அவர், தேச ஒற்றுமையில் சர்தார் வல்லபாய் படேலின் பங்களிப்புகளை நினைவு கூர்ந்தார். இந்தியா பல்வேறு இன மற்றும் மொழிக் குழுக்களைக் கொண்ட பன்முகத்தன்மையுடன் கூடிய நாடு என்றும், "ஒற்றுமைக்கான ஓட்டம்" போன்ற சந்தர்ப்பங்கள் வேற்றுமையில் ஒற்றுமையை நினைவுகூர்வதற்கான வாய்ப்பை வழங்குகின்றன என்றும் அவர் கூறினார்.

சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு நடைபெற்ற இந்த ஓட்டத்தில் சிவிஆர்டிஇ-யை சேர்ந்த சுமார் 150 ஊழியர்கள் பங்கேற்றனர்.

- **கா.கலைமணி**

# தேசிய ஒற்றுமை தினத்தையொட்டி, "ஒற்றுமைக்கான ஓட்டம்" நிகழ்ச்சிக்கு ஏற்பாடு







சுதந்திர இந்தியாவின் தேசிய ஒருங்கிணைப்பின் சிற்பி சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளான அக்டோபர் 31 அன்று ஒவ்வொரு ஆண்டும்"ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ்" (தேசிய ஒற்றுமை தினம்) அனுசரிக்கப்படுகிறது.

தேசத்தின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நமது உறுதிப்பாட்டை வளர்ப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் இது ஒரு சந்தர்ப்பமாகும்.

இதையொட்டி 31.10.2023 அன்று பார்க்டவுன் தலைமை தபால் நிலையத்தில் "ஒற்றுமைக்கான ஓட்டம்" நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தப் பேரணியில் பார்க்டவுன் தலைமை தபால் நிலைய ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த பேரணி, பார்க்டவுன் தலைமை தபால் நிலைய முதன்மை நுழைவாயிலில் இருந்து தொடங்கப்பட்டு, அரசு செவிலியர் விடுதி மற்றும் அரசு பல் மருத்துவக் கல்லூரி வழியாகப் புறப்பட்டு, பார்க்டவுன் தபால் நிலையத்தில் நிறைவடைந்தது. நவீன இந்தியாவைக் கட்டமைத்ததில் திரு.சர்தார் படேலின் பங்களிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

- A.**தங்கராஜ்**

# பிரதமரின் விஸ்வகர்மா யோஜனா

## 18 புரட்சி பாரம்பரிய வர்த்தகங்கள்



- இலவச விண்ணப்பம்
- அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்
- பயிற்சி **(ரூ.500 தினசரி ஊக்கத்தொகை)**
- கருவித்தொகுப்பு வாங்குவதற்கான ஆதரவு **(ரூ.15,000 வரை)**
- பிணையமில்லாத கடன்கள் **(முதல் தவணை ரூ.1 லட்சம், இரண்டாம் தவணை ரூ.2 லட்சம்)**

## *விளிம்பு நிலையில் வாழும் கைவினைக் கலைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றும் பாரத பிரதமர் திரு.மோடி அவர்களின் விஸ்வகர்மா யோஜனா திட்டம்*






# திட்டத்தின் மூலம் மதுரையில் 8 கி.மீ தூரம் நடைப்பயிற்சி: காணொலி மூலம் முதல்வர் தொடங்கி வைத்தார்!

தமிழகத்தில் சனிக்கிழமை(நவ.4) நடப்போம் நலம்பெறுவோம் என்ற திட்டத்தை காணொலி காட்சி வாயிலாக இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.


இதையடுத்து, தமிழகம் முழுவதும் அந்தந்த மாவட்டங்களில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இதில், அந்தந்த மாவட்டங்களில் அமைச்சர்கள், ஆட்சியர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் சமூக வலைதளதில் பதிவிட்டிருப்பதாவது:

நீரிழிவு நோயும், இரத்த அழுத்தமும் இந்தியர்களைப் பெரிதும் அச்சுறுத்துகின்றது. இதற்கு ஆரம்பகட்ட தீர்வாக மருத்துவ உலகம் முன்வைப்பது முறையான நடைப்பயிற்சியும் உடற்பயிற்சியும் தான்.

எனவே, அனைத்து மாவாட்டங்களிலும் நமது அரசு தொடங்கியுள்ள நலவாழ்வு நடைப்பயிற்சி 8 கி.மீ. சுகாதார நடைபாதை (Health Walk) திட்டத்தை அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்! நடப்போம் நலம் பெறுவோம்! என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

- **இளையதர்ஷினி**


SEVA
SAMARPAN
SANRAKSHAN
Making of an
Education Superpower
PM-SHRI
SCHOOLS
Pradhan Mantri Schools
for Rising India
Upgradation & development
of over 14,500 schools
across the country
Showcase of all components
of the NEP 2020
Lakhs of students
to be benefitted
NEP - National Education Policy
Source- GoI




# நெடுஞ்சாலைத்துறை சார்பில் கைபேசி செயலியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்

சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நெடுஞ் சாலைத்துறை சார்பில் கைபேசி செயலியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னை, கிண்டி, நெடுஞ் சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நெடுஞ் சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், பள்ளங்களற்ற சாலை என்ற இலக்கை அடைய சாலையில் ஏற்படும் பள்ளங்களை பொது மக்களின் துணையோடு கண்டறிந்து, குறித்த காலத்தில் செப்பனிடும் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட இணையத்தின் அடிப்படை யிலான "நம்ம சாலை" என்ற புதிய மென்பொருள் மற்றும் கைபேசி செயலியை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியான சாலை உள்கட்டமைப்பு அவசியம். கிராமப்புற பொருளாதாரத்தினை மேம்படுத்திடவும், புதிய வாழ்வாதார வாய்ப்புகளைத் உருவாக்கவும், சந்தைகள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை அணுகுவதை எளிதாக்குவதில் சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை, உருவாக்கி, பராமரித்து வருகிறது. தமிழ்நாடு "விபத்தில்லா மாநிலம்" என்ற முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டத்தினை செயல்படுத்த, "பள்ளங்களற்ற சாலை" என்ற இலக்கினை அடைவற்கு ஏதுவாக, பொதுமக்களின் துணையோடு கண்டறியப்படும் சாலையில் ஏற்படும் பள்ளங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சரிசெய்யப்பட வேண்டும் என்பதால், 2023-24 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது, பிரத்தேயக கைபேசி செயலி உருவாக்கப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில், இணையத்தின் அடிப்படையிலான

“நம்ம சாலை“ என்ற மென்பொருள் மற்றும் கைபேசி செயலி உருவாக்கப்பட்டு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுமேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இச்செயலியின் மூலம், நெடுஞ்சாலைத்துறை யினால் பராமரிக்கப்படும் சாலைகளில் ஏற்படும் பள்ளங்கள் குறித்து பொதுமக்கள் கைபேசி செயலி வாயிலாக, புவி குறியீட்டுடன் கூடிய புகைப்படங்களுடன் பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் அச்சாலைக்குரிய பொறியாளருக்கு செயலி வாயிலாக தெரிவிக்கப்பட்டு, குறித்த காலக்கெடுவுக்குள் பள்ளங்களை செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பிறகு, சரி செய்யப்பட்ட விவரம், சாலையின் புகைப்படங்களுடன், “நம்ம சாலை“ செயலி மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு, புகார் அளிக்கும் பொதுமக்களின் அலைபேசிக்கு அனுப்பப்படும். அதன்படி சாலையில் ஏற்படும் பள்ளங்கள் உடனுக்குடன் சீர் செய்யப்படுவது மட்டுமல்லாமல், தடையற்ற போக்குவரத்து உறுதி செய்யப்படும். இச்செயலி மூலம் பள்ளங்கள் குறித்து தெரிவிப்பதுடன் மட்டுமில்லாமல், பேரிடர் காலங்களில் மரம் விழுதல், வெள்ளப்பெருக்கு போன்றவற்றைக் குறித்தும் புகார்கள் அளிக்க ஏதுவாக இச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டு மானிய கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட, அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு நெருக்கமான பயனர் குழு (CUG) முறையில் நிரந்தர அலைபேசி எண் நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் உள்ள 45 கோட்ட பொறியாளர்கள், 192 உதவி கோட்ட பொறியாளர்கள் மற்றும் 274 உதவி பொறியாளர்களுக்கும் எளிதில் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் “நிரந்தர தொலைபேசி எண்“ வழங்கப்பட்டது.

- **பா.அசோக்குமார்**


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| **Full Page Color Back Wrapper** | : | **₹ 10,000/-** |
| **Full Page Color Inner Wrapper** | : | **₹ 8,000/-** |
| **Half Page Color Wrapper** | : | **₹ 5,000/-** |
| **Full Page Black & White** | : | **₹ 5,000/-** |
| **Half Page Black & White** | : | **₹ 2,000/-** |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
**3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,**
**OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**
**Ph: 044-35906002, 9962245338**
**Email: penakural@yahoo.com**

PENA KURAL TAMIL MONTHLY

UPI Number:
9962245338



# மேகமலை காட்டுக்குள் விவசாயிக்கு என்ன நடந்தது?

தேனி மாவட்டம் மேகமலை காட்டுக்குள் வனத்துறையினரால் 55 வயது ஈஸ்வரன் அக்டோபர் 28ம் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார். யானைகள் வலசை மின்வேலிகள் அமைத்த ஈஸ்வரன், வனத்துறையினரை கொல்ல முயன்றதாகவும் தற்காப்புக்காக அவரை சுட்டுக்கொன்றதாகவும் வனத்துறையினர் கூறுகின்றனர்.

ஆனால், ஈஸ்வரன் வயலில் தண்ணீர் பாய்ச்சவே சென்றதாகவும் அவரை வனத்துறையினர் சட்டவிரோதமாக கொன்று விட்டதாகவும் குடும்பத்தார் குற்றம் சாட்டுகின்றனர்.

மேகமலை ஸ்ரீவில்லிபுத்தூர் பாதுகாக்கப்பட்ட புலிகள் காப்பகத்தில் யானைகள் வலசை செல்லும் பாதையில் சட்டவிரோதமாக மின் இணைப்பு இழுத்து மின்வேலி அமைத்து வேட்டையாட முயன்றதாக ஈஸ்வரன்(55) என்ற நபர் மீது வனத்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அவர் பலியானார்.

விவசாய நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக சென்ற முதியவரை வனத்துறையினர் அடித்து, துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்திருப்பதாக உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர். வனத்துறை யினரை கத்தியால் குத்த முயன்றதால் தற்காப்புக்காக வனத்துறை அதிகாரி துப்பாக்கியால் சுட்டனர் என வனத்துறையினர் விளக்கம் அளிக்கின்றனர்.

### மேகமலை புலிகள் காப்பகத்தின் சிறப்பு என்ன?

இந்தியாவின் தேசிய விலங்கான புலி அழிந்து வரும் நிலையில் இருப்பதால் அவற்றைப் பாதுகாப்பதற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. புலிகளை பாதுகாத்து புலிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக நாடு முழுவதும் 51 புலிகள் காப்பகம் அமைக்கப்பட்டு உள்ளன. இதில்

தமிழ்நாட்டில் மட்டும் முதுமலை, களக்காடு முண்டந்துறை, சத்தியமங்கலம், ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் உட்பட 5 புலிகள் காப்பகம் உள்ளன.

மதுரை, விருதுநகர், தேனி ஆகிய மூன்று மாவட்டத்தின் பகுதிகளில் விரிவடைந்து இருக்கக்கூடியது ஸ்ரீவல்லிபுத்தூர் - மேகமலை புலிகள் காப்பகம். இது கடந்த 2021 ஆம் ஆண்டு புலிகள் வாழும் பகுதியாக அரசால் கண்டறியப்பட்டு அந்த பகுதி புலிகள் காப்பகமாக வனத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்த புலிகள் சரணாலயம் 1016 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது. உலகத்தில் உள்ள 36 பல்லுயிர் பெருக்கம் நிறைந்த பகுதிகளில் மேகமலை புலிகள் காப்பகமும் ஒன்று. இதில் புலி, சிறுத்தை, காட்டெருமை, மான் யானை, வரையாடு, சிங்கவால் குரங்கு சாம்பல் நிற அணில் என 32 பாலூட்டிகள், 510 பறவை, பூச்சி வகைகள், 190 வகையான வண்ணத்துப்பூச்சிகள், 18 மீன்கள் வகைகள் என பல்லுயிர் நிறைந்த பகுதியாக இருக்கிறது.

இந்த புலிகள் காப்பகம் மற்ற புலிகள் காப்பகத்தை விட அதிக பரப்பளவு, நீர் தேக்கம் கொண்ட பகுதியாக இருக்கிறது. இதனால் இங்கு புலிகள் வாழ்க்கை, இனப்பெருக்கம் அடைவதற்கான ஏற்ற சூழல் இங்கு நிலவுகிறது.

### மேகமலையில் புலிகள் எண்ணிக்கை எவ்வளவு?

மேகமலை புலிகள் காப்பகத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 13 புலிகள் இருந்தன. அதற்கு அடுத்த ஆண்டில் 21 புலிகளாக அதிகரித்தது.

அதன்பிறகு 2020, 2021-ம் ஆண்டில் கொரோனா பெருந்தொற்று காரணமாக புலிகள் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை.

2022-ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் புலிகளின் எண்ணிக்கை இரண்டு ஆண்டில் 8 அதிகரித்து 21 ஆக இருந்தது.

2023 ஆம் ஆண்டு வனத்துறையினரால் எடுக்கப்பட்ட புலிகள் கணக்கெடுப்பு பணியின் போது 15 புலிகள் 4 குட்டிகள் என 19 புலிகள் கணக்கெடுக்கப்பட்டது. இது மேகமலை காடுகள் புலிகளின் வாழ்வியலுக்கு உகந்த சூழல் இருப்பதை காட்டின.

### காட்டுக்குள் நடந்தது என்ன?

தேனி மாவட்டம் உத்தமபாளையம் குள்ளப்பகவுண்டன்பட்டி பகுதியைச் சேர்ந்தவர்



ஈஸ்வரன்(55). இவர் ஸ்ரீவல்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் விவசாயக்கூலியாக இருந்து வந்தார்.

இதற்கு முன்பாக இவர் யானைகள் வலசை செல்லும் பாதையை வனத்துறையினருக்கு காண்பிக்கும் பணியில் ஈடுபட்டதாக இவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த அக்டோபர் 28ஆம் தேதி மாலை விவசாய நிலத்திற்கு சென்றவர் மறுநாள் வனத்துறையினரால் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிழந்ததாக அவரது குடும்பத்திற்கு தகவல் அளிக்கப்பட்டது. அவரது உடல் உறவினரிடம் தெரிவிக்காமல் கம்பம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள பிணவறையில் உடற்கூறு ஆய்விற்காக வைக்கப்பட்டு இருந்தது.

இது குறித்து தகவல் அறிந்த உறவினர்கள் கம்பம், தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குவிந்தனர். வனத்துறையினர் திட்டமிட்டு ஈஸ்வரனை சுட்டுக் கொலை செய்ததாகவும், இந்த சம்பவத்தில் ஈடுபட்ட 5 வனத்துறை அதிகாரிகளை கைது செய்து விசாரணை நடத்த வேண்டும் என உடலை வாங்க மறுத்து போராட்டம் செய்தனர். பின்னர் ஆண்டிப்பட்டி எம்.எல்.ஏ மகாராஜன் உறவினர்களிடம் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து உடலைப் பெற்றுச் சென்றனர்.

**“இறந்ததை ஏன் உடனே தெரிவிக்கவில்லை?”**

ஈஸ்வரன் அக்டோபர் 28ம் தேதி மாலையே சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில், அதை ஏன் உடனே குடும்பத்தினருக்கு தெரிவிக்கவில்லை என ஈஸ்வரனின் உறவினர் விஜய் கேள்வி எழுப்புகிறார். மேலும் மிக அருகில் இருந்து ஈஸ்வரனை வனத்துறையினர் சுட்டதாகவும் அவர் குற்றம் சாட்டுகிறார்.

“எனது சித்தப்பா ஈஸ்வரன் 10 ஆண்டுகளுக்கு மேலாக யானை வலசை செல்லும் பாதைகளின் வழிகாட்டியாக வனத்துறைக்கு உதவி செய்து வந்திருக்கிறார். கடந்த 3 மாதங்களுக்கு மேலாக அந்த பணிக்குச் செல்லவில்லை. அவ்வப்போது எனது சித்தப்பாவை வனத்துறையினருக்கு கைது செய்ய ஆள் கிடைக்கவில்லை என்றால் வழக்கில் கணக்கு காண்பிக்க அழைத்துச் செல்வார்கள்.”

“ஆனால், கடந்த அக்டோபர் 28 ஆம் தேதி மாலை வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக சென்றவர் வீடு திரும்பவில்லை. மறுநாள் காலை (அக்டோபர் 29) வனத்துறையால் நடத்திய துப்பாக்கி சூட்டில் இறந்ததாக குடும்பத்திற்கு தகவல் கொடுக்கப்படுகிறது.”

“ஆனால், துப்பாக்கி சூடு அக்டோபர் 28 மாலையே நிகழ்ந்து உள்ளது. துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தை உயர் அதிகாரிகள் அனைவரும் பார்வையிட்டு உள்ளனர். ஏன் அன்றிரவே இந்த தகவலை எங்களுக்கு தெரிவிக்கவில்லை?” என கேள்வி எழுப்புகிறார் விஜய்.

ஈஸ்வரனின் உடல் உறவினரிடம் தெரிவிக்காமல் கம்பம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது எனவும் அவர் குற்றம் சாட்டுகிறார்.

“எனது சித்தப்பாவை வனத்துறையினர் பிடித்து தலை, கால் உள்ளிட்டப் பகுதிகளில் கடுமையாக தாக்கியதோடு அவரை மார்பில் துப்பாக்கியால் மிக அருகில் வைத்து சுட்டுக் கொலை செய்து இருக்கின்றனர்.

இதற்குப் பின்னால் இருக்கக்கூடிய வனத்துறை அதிகாரிகள் மீது வழக்கு பதிவு செய்து கைது நடவடிக்கை எடுத்து விசாரணை செய்தால் மட்டுமே உண்மைகள் வெளியே வரும்” என அவரது உறவினர் விஜய் கூறினார்.

**வனத்துறையினர் துப்பாக்கி சூட்டுக்கு காரணம் என்ன?**

மேகமலை புலிகள் காப்பகம் பகுதியில் வேட்டையாடுவதற்காக மின்வேலிகள் அமைக்கப்பட்டு இருப்பதாக வனத்துறையினருக்குத் தகவல் கிடைக்கிறது.

இதனையடுத்து வனவர் திருமுருகன் தலைமையில் 7 பேர் கொண்ட குழுவினர், வனசரகர் முரளிதரன் மற்றுமொரு வன அலுவலர் என இரு குழுவாக பிரிந்து சென்றனர்.

இதில் வனவர் திருமுருகன் தலைமையிலான குழுவினர் செக் போஸ்ட் வழியாக காட்டிற்குள் பார்வையிட்ட படியே சென்றனர். முரளிதரன் மற்றும் மற்றொரு வனத்துறை அலுவலர் காட்டின் உள் வழியாக சென்றனர். “அப்போது வண்ணாத்திபாறை பகுதியில் யானைகள் வலசை செல்லும் பகுதியில் வன விலங்குகளை வேட்டையாடுவதற்காக பாதையை மறித்து சட்டவிரோதமாக மின் கம்பத்தில் மின்சாரம் எடுக்கப்பட்டு இரு மின் வேலிகள் அமைக்கப்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது” என வனத்துறை உயர் அதிகாரி தெரிவித்தார்.

இனைத் தொடர்ந்து அந்த பகுதியில் சோதனை செய்த போது அங்கு கூடலூர் பகுதியைச் சேர்ந்த ஈஸ்வரன் என்ற முதியவர் இருந்தார். அவரை பிடித்து விசாரணை செய்த போது அவர்தான் காட்டில் வேட்டையாட மின் வேலி அமைத்தது தெரிந்தது என அந்த வனத்துறை அதிகாரி கூறினார்.

**அதிகாரியை கொல்ல முயன்றதால் துப்பாக்கிச் சூடா?**

ஈஸ்வரனை பிடித்த போது என்ன நடந்தது என வனத்துறை அதிகாரி ஒருவர் விவரித்தார்.

“விசாரணை செய்துக் கொண்டிருக்கும் போது தூரத்தில் டார்ச் ஒளி தெரிந்ததால் இவரை வனத்துறையினர் சிலர் பாதுகாப்பில் விட்டு சிலர் அந்த ஒளியை பின்னோக்கி சென்றனர். ஆனால் அந்த வெளிச்சம் பாதியிலேயே மறைந்தது. இதனை அடுத்து மீண்டும் முதியவர் ஈஸ்வரனை பிடித்து அழைத்துச் செல்ல முயன்ற போது அவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் வனத்துறையினரை தாக்க முயன்றார். அதில் இருந்து தற்காத்துக் கொள்ள வனத்துறையினர் சுட்டதில் ஈஸ்வரன் முதுகுப்பகுதியில் துப்பாக்கி குண்டு பாய்ந்து இறந்துவிட்டார்” என தெரிவித்தார் வனத்துறை அதிகாரி.

**நீதிபதி விசாரணையில் என்ன நடக்கும்?**

இந்த வழக்கு தற்போது நீதிபதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. தேனி காவல் கண்காணிப்பாளர் பிரவீன் உமேஷ் டோங்கிரே, ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தின் துணை இயக்குநர் ஆனந்த், உத்தமபாளையம் மாஜிஸ்திரேட் நீதிபதி ராமநாதன் இணைந்து நேரில் ஆய்வு செய்து இருக்கினறனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வனத்துறையினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சட்டப்பிரிவு 176 1கி-ன் படி நீதிபதி விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

இந்த விசாரணையின் அடிப்படையில் நீதிபதி அளிக்கும் உத்தரவிற்கு பிறகே இது நீதித்துறை விசாரணைக்குச் செல்கிறதா? அல்லது துறைரீதியான விசாரணை மேற்கொள்ளப்படுமா என்பது தெரியவரும்.

**வனத்துறையினர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல சட்டம் அனுமதிக்கிறதா?**

வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972-ன் படி வனத்துறையினரை வனப்பகுதியில் இருக்கும் போது வன விலங்குகள் தாக்க வந்தால் தற்காப்பிற்காக அதனை சுடலாம். அதே போல் ஐ.பி.சி 96 முதல் 106 வரையிலான பிரிவுகளின் படி தனிமனித பாதுகாப்பு, பிறர் பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் பயன்படுத்தலாம்.

ஆனால் அதனை நீதிபதியின் விசாரணையில் துப்பாக்கியால் சுட்டது சரி என நிரூபிக்க வேண்டியது அந்த அதிகாரியின் கடமை.

**“சுட்டுக் கொல்ல வனத்துறைக்கு யார் அதிகாரம் கொடுத்தார்?”**

தேனியில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் அப்பட்டமான மனித உரிமை மீறல் என்கிறார் மக்கள் சிவில் உரிமை கழகம் (PUCL) தேசிய செயலாளர் ச.பாலமுருகன்.



செயற்பாட்டாளர் பாலமுருகன்

“குற்றம் செய்தவர் அத்துமீறி மேகமலை வனப்பகுதியில் நுழைந்தால் வனத்துறை சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்க மட்டுமே வனத்துறையினருக்கு அதிகாரம் உள்ளது. குற்றவாளியை சுட்டுக் கொல்ல வனத்துறைக்ககு அதிகாரம் கொடுத்தது யார்?” என கேள்வி எழுப்புகிறார் பாலமுருகன்.

ஈஸ்வரனை சுட்டுக் கொலை செய்த வனத்துறை அதிகாரி மீது காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தினார். மேலும் அந்த வனத்துறை அதிகாரி மீது சி.பி.சி.ஐ.டி விசாரணை நடத்தி உண்மையை கண்டறிய வேண்டும் என்றும் அவர் கோரினார்.

“அவர் மீது குற்றமில்லை என நிரூபிக்கப்பட்டால் மட்டுமே அவரை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும். அதுவரை கொலை குற்றவாளியாகவே விசாரணை செய்ய வேண்டும்.” என்றார் பாலமுருகன்.

**சட்டத்தை தவறாக பயன்படுத்துகிறதா வனத்துறை?**

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (சிஸிறிசி) 46 படி கொடுங் குற்றம் செய்த நபரை, குற்றவாளியின் உயிருக்கு பாதிப்பு இல்லாத வகையில் பிடிக்க வேண்டும்.

“ஆனால், அதனை காவல்துறை வனத்துறை அதிகாரிகள் தவறாக புரிந்து கொண்டு தான் தோன்றித்தனமாக இது போன்ற என்கவுண்டரை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு காவல்துறையினரை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இது போன்ற சம்பவங்களில் மெத்தனமாக செயல்படுகிறார்.

அதிகாரிகள் ஆயுதத்தை பயன்படுத்தி மக்களை சுடும் இது போன்ற சம்பவங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு குறைந்தபட்சம் 25 லட்சம் நிதி உதவி வழங்க வேண்டும்” ” என பாலமுருகன் தெரிவித்தார்.

வனத்துறையினர் எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதல்களை அரசு வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையும் வைக்கப்படுகிறது.

- Courtesy, BBC Tamil

- **தமிழ்வீரன்**

# காற்றின் தரம் குறைய என்ன காரணம்?

தரம் குறைந்த காற்று காரணமாக, இந்தியாவின் பல நகரங்களில் புகை மண்டலம் போல மாசு படிந்த நிலைமை ஏற்பட்டது. உலகில் மிக மோசமான காற்றுத் தரமற்ற 15 நகரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆக்ரா, லக்னௌ, வாரணாசி, பாட்னா, ஜெய்பூர், ஜோத்பூர், ஸ்ரீநகர், ஃபரீதாபாத், கான்பூர் நகரங்கள் அந்தப் பட்டியலில் இடம் பெறுகின்றன.

இந்தியாவைப் போலவே, உலகின் பல நகரங்கள் இந்தப் பிரச்னையை எதிர்கொள்கின்றன. உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வறிக்கை, உலக மக்கள்தொகையில் 90% பேர் மாசு நிறைந்த காற்றைத்தான் சுவாசிக்கிறார்கள் என்கிறது. 2019 அறிக்கையின்படி, காற்று மாசால் ஏற்படும் பாதிப்பால், 45 லட்சம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

வழக்கத்துக்கு முன்பாகவே நுரையீரல் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரை அளவில் தலைநகர் தில்லியின் காற்றுத் தரம் இல்லாமல் போனால், அங்கே வாழ்பவர்களின் ஆயுள்காலம் 11.9 ஆண்டுகள் குறையக்கூடும் என்கிறது சிகாகோ பல்கலைக்கழகத்தின் ஆய்வு.

காற்றின் தரம் குறைவதற்கும், காற்று மாசு அதிகரிப்பதற்கும் சில பொதுவான காரணிகள் கூறப்படுகின்றன. அதிகரித்துவரும் டீசல் வாகனங்கள், கட்டுமானப் பணிகள், அனல் மின்நிலையங்கள், புகை கக்கும் தொழிற்சாலைகள் போன்றவை பொதுவான காரணிகள். குப்பையை எரிப்பதும், பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிப்பதும்கூட காற்றின் தரத்தை பாதிக்கின்றன. தில்லியைப் பொருத்தவரை, அண்டை மாநிலங்களான பஞ்சாப், ஹரியாணாவில் அறுவடை முடிந்த பிறகு வைக்கோலுக்குத் தீ மூட்டுவது, மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது.

காற்று மாசு உருவாக்கம் என்பது, ஒவ்வொரு பருவத்தில் ஒவ்வொரு விதத்தில் உருவாகிறது. கோடை காலத்தில் தூசின் அளவு 31% முதல் 34% என்றால், அதுவே குளிர் வந்துவிட்டால் 6% முதல் 15% என்கிற அளவில் குறைந்துவிடும். வாகனங்கள், தொழிற்சாலைகள், குப்பை எரித்தல் ஆகியவற்றால் உருவாகும் புகையால் ஏற்படும் மாசு, குளிர்காலத்தில் 85% முதல் 94% வரை அதிகரிக்கிறது. அண்டை மாநிலங்களில் வைக்கோல் எரிப்பது என்பது வருடத்தில் ஒரு முறைதான் நடைபெறுகிறது.



அதனால், அவ்வப்போது சூழலுக்கு ஏற்ப, காற்றின் தரத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம் வகுக்கப்படுவதன் மூலம்தான் இந்தப் பிரச்னையை எதிர்கொள்ள முடியும். குளிர்காலத்தில்தான் காற்றின் தரம் மிகவும் குறைந்து காணப்படுகிறது என்பதால், அதை எதிர்கொள்வதற்கு மாநகராட்சி தயாராக இருப்பதுதான் இதற்குத் தீர்வு.

சாலையில் காணப்படும் தூசின் அளவைக் கட்டுப்படுத்துவதும், மோட்டார் வாகனங்களின் புகையை மட்டுப்படுத்துவதும் சுலபமாக முன்னெடுக்க முடிகின்ற நடவடிக்கைகள். சாலையோர மரங்களும், தொடர்ந்து சாலைகளில் தண்ணீர் தெளிப்பதும் மணல் தூசைக் கட்டுப்படுத்தும். பெட்ரோல், டீசல் வாகனங்களுக்குத் தடைவிதித்து எல்.பி.ஜி., மின்சார வாகனங்களை மட்டுமே அனுமதிப்பது என்று மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டால், வாகனப் புகைக்கு விடை கொடுத்துவிடலாம்.

1483 சதுர கி.மீ. விஸ்தீரணமுள்ள தலைநகர் தில்லியில் ஏற்கெனவே 400 கி.மீ. மெட்ரோ ரயில்பாதை செயல்படுகிறது. இது தொடர்ந்து விரிவாக்கம் செய்யப்படுகிறது. மெட்ரோ ரயில் நிலையங்களிலிருந்து சுற்றுப்புறப் பகுதிகளுக்கு, குறைந்த கட்டணத்தில் வசதியான சிற்றுந்துகள் அதிக அளவில் விடப்படுவதன் மூலம், தனியார் மோட்டார் வாகனங்களைக் கட்டுப்படுத்த முடியும். எரிவாயு, மின்சார வாகனங்கள் மட்டுமே இயங்கும் என்கிற நிலைமை ஏற்பட்டால், மெட்ரோ ரயில்களை நாடுபவர்கள் அதிகரிக்கவே செய்வார்கள்.

குடிக்க சுத்தமான தண்ணீரும், சுவாசிக்கத் தரமான காற்றும் உண்ண உணவும், உடுக்க உடையும்போல அடிப்படைத் தேவைகள். அவற்றை உறுதிப்படுத்துவது அரசின் கடமை!

- K. **சுப்புலட்சுமி**





# புகையிலை பயிர்

# சுற்றுச்சூழலுக்கு ஆபத்தா?

**புகையிலை:** பணப்பயிரான புகையிலையை பயிரிடுவதால் 1 கோடி முதல் 2 கோடி மக்களுக்குத் தேவையான உணவுப் பயிர் பயிரிடும் நிலம் அபகரிக்கப்படுகிறது. இந்த உலகில் பணம்தான் எல்லாம் என்று நம்பப்படுகிறது. ஆனால் 40 வயதைக் கடந்தவர்களிடம் கேட்டுப் பாருங்கள். உடல்நலம்தான் நமது மிகப் பெரிய செல்வம் என்பார்கள். அது பாதிக்கப்பட்டால் நாம் அனைத்தையும் இழந்துவிட்டோம் என்பதை அறிவோம். ஆனால் அதைவிட முக்கியமாக வளமான சுற்றுச்சூழலை இழந்துவிட்டால், நமது வாழ்வின் அடிப்படையை இழந்துவிடுவோம். மாசுபட்ட சுற்றுச்சூழல் நம் உடலையும் பாதிக்கும் என்ற உண்மையை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம்.

உலகம் அதிவேகமாக மாறி வரும் சூழ்நிலையில் தொழில்மயமாதல், நகர மயமாதல், வாகனங்கள் எண்ணிக்கை அதிகரிப்பு, மக்கள்தொகை பெருக்கம் போன்ற ஒவ்வொரு காரணமும் தன் பங்குக்கு சுற்றுச்சூழலை சீரழித்து வருகின்றன. காடுகள் அழிக்கப்படுவதை அனைவரும் அறிவோம். இது ஒரு முக்கிய சூழல் பேரழிவு. அதேநேரம் இந்தக் காடுகளை அழித்த பின் நடக்கும் மாற்றமும் சுற்றுச்சூழலை இரண்டு மடங்கு பாதிக்கலாம். இப்படிப்பட்ட ஒன்றுதான் புகையிலை பயிரிடுதல். அந்தப் புகையிலையில் இருந்து உருவாக்கப்படும் பொருட்கள் மூலம் வெளிவரும் நச்சுப் பொருட்கள் காற்றில் கலந்து மூன்று மடங்கு பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. எனவே, காடு அழிப்பு என்ற சுற்றுச்சூழல் சீரழிவு அத்துடன் முடிந்து போய்விடுவதில்லை.

1960களில் போதை ஏற்படுத்தும் புகையிலையை மக்களிடையே பழக்கப் படுத்துவதற்காக பன்னாட்டு நிறுவனங்கள்-உலக முதலாளிகள் மேற்கொண்ட தந்திரங்கள் முக்கியமானவை. உலக மக்கள்தொகையை ஒரு பொருளுக்கு அடிமையாக்குவதன் மூலம், எப்படி தங்கள் வருமானத்தை தொடர்ச்சியாகப் பெருக்குவது என்ற தந்திரத்தை அவர்கள் அப்போது கற்றுக் கொண்டார்கள். புகையிலை பரவலாகி

பழக்கமாகும் வரை, புகையிலையால் ஏற்படும் உடல்நல பாதிப்புகள் பொய் என்பது போன்ற ஒரு தோற்றத்தை, தங்களுக்குச் சார்பான விஞ் ஞானிகள் குழு மூலம் தொடர்ச்சியாக பிரசாரம் செய்து உருவாக்கினர். இந்தியாவில் பல்வேறு தொழில்களில் முதலீடு செய்துள்ள ஐ.டி.சி. என்ற இந்தியன் டுபாகோ கம்பெனி அடிப்படையில் ஒரு புகையிலை நிறுவனமே.

உலக புகையிலை உற்பத்தியில் சீனா, பிரேசிலுக்கு அடுத்தபடியாக இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. புகையிலையை பயன்படுத்துவதில் சீனாவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் புகையிலை பயிரிடுவதற்காக இரண்டு லட்சம் ஹெக்டேர் காடுகள் அழிக்கப்படுகின்றன. இதில் இந்தியாவில் 42 ஆயிரம் எக்டேர் பரப்பில் புகையிலை பயிரிடப்படுகிறது. புகையிலை பயிரிடுதல், எரிபொருள், புதிய வகை பயிர்கள் பயிரிடுதல், "பேக்" செய்வது ஆகிய காரணங்களுக்காக புகையிலை சார்ந்த காடழிப்பு நடைபெறுகிறது. இதற்காக பெரும்பாலான வளரும் நாடுகளில் காடுகள் அழிக்கப்படுவதால், உலக அளவில் 1.7 சதவீத காடுகளின் பரப்பு இதற்கு மட்டுமே அழிந்து வருகிறது. மொத்த காடுகளின் பரப்பளவில் 4.6 சதவீதம் புகையிலை பயிரிடப்படும் நாடுகளில் மட்டும் அழிக்கப்படுகிறது.

சிகரெட், பீடி, மெல்லும் புகையிலை போன்றவற்றை தயாரிப்பதற்கு புகையிலை பயன்படுத்தப்படுகிறது. உலக பீடி உற்பத்தில் 85 சதவீதம், அதாவது 19 கோடி கிலோ பீடி இந்தியாவில் உற்பத்தியாகிறது. உலக புகையிலை பொருட்கள் உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 33 சதவீதம் (ஏழை பீடி தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம், குழந்தை உழைப்பு போன்ற வேறு சமூகப் பிரச்சினைகளும் இதில் அடங்கியுள்ளன).

புகையிலை பண்ணைகளில் 20 ஆயிரம் குழந்தைகளும், பீடி-சிகரெட் பாக்கெட் தயாரிப்பு பணியில் 27 ஆயிரம் குழந்தைகளும் ஈடுபட்டுள்ளதாக புதுதில்லியில் உள்ள குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலகப் பேரணி தெரிவிக்கிறது.

தமிழகத்தில் மெல்லும் வகை புகையிலை தென்மாவட்டங்களில் அதிகம் பயிரிடப்படுகிறது. தவிர, தஞ்சாவூரிலும் கடற்பாங்கான மண் உள்ள பகுதிகளிலும் இவை பயிரிடப்படுகின்றன. மதுரையின் சில இடங்களில் குறைவான எரியும் தன்மை கொண்ட சுருட்டு தயாரிக்கப் பயன்படும் புகையிலை பயிரிடப்படுகிறது.

**காட்டு வளம் பாதிப்பு:**

ஒரு டன் புகையிலையை பதப்படுத்துவதற்கு ஒரு எக்டேர் மரங்கள் தேவைப்படுகின்றன. ஒரு கிலோ புகையிலையை பதப்படுத்துவதற்கு 7.8 கிலோ மரக்கட்டை எரிக்கப்படுகிறது. உலக சுகாதார நிறுவன ஆய்வின்படி ஒரு ஏக்கர் புகையிலை பயிரிடுவது 150 மரங்களை அழிப்பதற்குச் சமமாகும். 600 கிலோ புகையிலையை பதப்படுத்த உதவும் எரிபொருளைக் கொண்டு 20 வீடுகளுக்கான எரிபொருள் தேவையை பூர்த்தி செய்யலாம்.

போபாலில் உள்ள இந்திய காட்டு மேலாண்மை நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின்படி, 1962 முதல் 2002 வரையிலான 40 ஆண்டு காலத்தில் புகையிலை பதப்படுத்துதல், சிகரெட் போன்ற புகையிலை பொருட்கள் தயாரிப்புக்காக 680 சதுர கிலோ மீட்டர் காடுகள் அல்லது 86.8 கோடி டன் மரக்கட்டைகள் அல்லது 22 கோடி டன் கட்டுமானத் தரம் வாய்ந்த மரக்கட்டைகள் அல்லது 66.8 கோடி டன் எரிபொருள் சுரண்டப்பட்டுள்ளது.

இவ்வாறு அழிக்கப்பட்ட எரிபொருளின் அளவைக் கணக்கிட்டால் அதைக் கொண்டு அனல் மின்நிலையம் ஒன்றை இயக்கி, தலைநகர் தில்லி, நாட்டின் மிகப் பெரிய மாநிலமான உத்தரபிரதேசம் ஆகிய இரண்டு மாநிலங்களுக்கு ஓர் ஆண்டுக்குத் தேவையான மின்தேவையை முழுமையாக பூர்த்தி செய்திருக்கலாம். இன்னும் எளிமையாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால், இந்தியாவில் மட்டும் சிகரெட்டை சுருட்டவும் பேக் செய்யவும் 4 மைல் தாள்கள் பயன்படுத்தப்படுகின்றன. 300 சிகரெட்டுகள் தயாரிக்க ஒரு மரம் வெட்டப்படுகிறது.

புகையிலையை பதப்படுத்த எரிபொருள் பற்றாக்குறை நிலவும் இடங்களில் புகையிலை பயிரின் தண்டுகளையே பயன்படுத்துவதால், அது தீவிரமான உடல்நலப் பிரச்சினைகளை உருவாக்குகிறது. ஆந்திராவில் கோதாவரி பாசனப் பகுதியில் உள்ள வடிசலேறு கிராமத்தில் எடுக்கப்பட்ட ஆய்வின்படி, இங்கு வாழ்பவர்கள் காசநோய், கண்புரை போன்ற நோய்களால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். புகையிலை பயிரிடப்படாத ஒரு கிராமத்துடன் ஒப்பிட்டால் இது பல மடங்கு அதிகம்.

- **மணிகண்டன் @ சரவணன்**






# 'நீட் தேர்வை எதிர்க்க கட்சிகளுக்கு உரிமை உண்டு':

## ஐகோர்ட் அதிரடி உத்தரவு!

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை மத்திய அரசுக்கு உணர்த்தும் வகையில், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில், தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் "நீட் விலக்கு, நம் இலக்கு" எனும் மாபெரும் கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இதனை கடந்த 21ம் தேதி சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சரும் தி.மு.க தலைவருமான மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு தொடக்கி வைத்து முதல் கையெழுத்திட்டார்.

இந்நிலையில், தி.மு.க.-வின் கையெழுத்து இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து வழக்கறிஞரும் தேசிய மக்கள் கட்சியின் தலைவருமான எம்.எல்.ரவி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதில் அவர், "தி.மு.க மேற்கொள்ளும் கையெழுத்து இயக்கத்தில், மாணவர்களிடம் கட்டாயப்படுத்தி கையெழுத்து வாங்கப்படுகிறது. இது சட்ட விரோதம், எனவே, இதற்கு தடை விதிக்க வேண்டும். இது தொடர்பாக அரசும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை" என்று தெரிவித்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதியின் அமர்வின் போது இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், "நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தின் மூலம் மனுதாரர் எப்படி பாதிக்கப்படுகிறார்? நீட் தேர்வு விவகாரத்தில் மத்திய அரசு ஏதேனும் முடிவெடுத்து அது மாணவர் நலனுக்கு விரோதமாக அமைந்தால் பொது நல வழக்காக தொடரலாம்.

நீட் தேர்வை எதிர்க்க கட்சிகளுக்கு உரிமை உள்ளது. அரசியல் கட்சிகளுக்கு ஒரு விஷயத்தில் எதிர்ப்பு தெரிவிக்க உரிமை இருந்தாலும், இதுபோன்ற பொது நல வழக்குகளை தாக்கல் செய்வதற்கு வரம்பு இருக்கிறது. மனுதாரரின் நோக்கத்தை நிரூபிக்கும் வகையில் ஒரு லட்ச ரூபாயை டெபாசிட் செய்தால் வழக்கை விசாரிக்கிறோம்" என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் வழக்கை வாபஸ் பெறுவதாக அறிவித்தனர். இதனையடுத்து, வழக்கை முடித்துவைத்து நீதிபதிகள் "சமுதாயத்திற்கு நலன்பயக்கும் விஷயமாக இருந்தால் அது தொடர்பாக பொது நல வழக்கு தாக்கல் செய்யலாம்" என்று உத்தரவிட்டனர்.

- D.பாமா


PENA KURAL TAMIL MONTHLY

**பேனா குரல்**

**PENA KURAL**

தமிழ் மாத இதழ்

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் :
நா வீ சிவசங்கர்

ஆசிரியர் : ராதிகா. சி, B.E.,

துணை ஆசிரியர்கள் :
துரை. சந்துரு, ந.திவாணன், M.சந்திரசேகர்
K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின்
பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி,
T.சிவக்குமார், M.அறிவுநிதி

தலைமை நிருபர்கள் :
பா.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன்,
பா.சரவணன், A.தங்கராஜ்,
K.மாரிதுரை, ம.திலிப் குமார்

நிருபர்கள் :
Ba.சரவணன், தமிழ் மணி, உ.சரவணன்,
கா.கலைமணி, தி.பாமா, ஜெபசீலன், கு.தீபக்,
தமிழினி, இளைய தர்ஷினி, P.ஜேசுராஜ்,
பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன்,
கா.சுபுலட்சுமி, அன்பு மணி, R.பிரகாஷ்,

புகைப்பட நிருபர்கள் :
வா.கவியரசன், கா.மிதுன் சாய்

ஓவியங்கள்: வீ.சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்: G. நாகராஜ், B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *Tamilni Printz*

நிர்வாக அலுவலகம் :
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு :
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com



* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.*


வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
S D A
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance Available
Rs.12,999/-
Compo Offer
Rs.999/-
Rs.3699/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.

**PENA KURAL,** Tamil Monthly, November 2023
Registrar of Newspapers for India - Registered No.: **TNTAM/2022/85375**




Printed, Published and Owned by: **NV SIVASHANKAR**

Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.**

Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.**

Editor: **RATHIKA S**